www.padippakam.com

மார்க்சிசம், லெனினிசம், மாசேதுங் சிந்தனையில்

# நீண்ட பயணம்

தோழர் மாவோ பிறந்த நூறாவது ஆண்டு நிறைவடைந்து கொண்டிருக்கிறது



அவர் சிந்தனை
உலகெங்கும் மலர்ந்து கொண்டிருக்கிறது

ஆகஸ்ட் - செப்டம்பர் - அக்டோபர்

நன்கொடை ரூ. 3

படிப்பகம்

www.padippakam.com

# தோழர் சாருமஜூம்தார்

இந்தியக் கம்யூனிஸ்டு இயக்க வரலாற்றில் திருத்தல் வாதத்திற்கு எதிரான போராட்டத்தின் வாயிலாகவும், மறக்க முடியாத உயிர்த்தியாகத்தின் வாயிலாகவும், அமரராகி விட்ட தோழர் சாருமஜூம்தார், ஆளும் வர்க்கச் சக்திகளால் கொலை செய்யப்பட்டு கடந்த ஜூலை 28-ஆம் தேதியுடன் 22ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.



மகத்தான தெலுங்கானா, தெபகா, புன்னபுரவயலார் உள்பட எண்ணற்ற வீரஞ்செறிந்த போராட்டங்களின் வாயிலாக, இந்தியாவின் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் ஆசையும் அபிலாஷைகளுமாக வளர்ந்த இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தை, 56-ல் உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஆதிக்கம் பெற்று, உலகளாவிய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வீறுகொண்ட முன்னேற்றத்தை தடம்புரளச் செய்த குருஷ்சேவியிசம் பாதித்தது; வர்க்கப் போராட்டத்திற்கு மாறாக சகவாழ்வும், சமூகப் புரட்சிக்கு மாறாக முதலாளித்துவ பாதையும் முன் வைத்து குருஷ்சேவ் வழி இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தை திருத்தல்வாதத்தின் சகதிக்குழிக்குள் மூழ்கடித்துவிட்டது. 1964-ல் கட்சியில் பிளவேற்பட்டு உருவான சி. பி. ஐ. (எம்) புதிய திருத்தல் வாதத்தின் ஊதுகுழலாக மாறிவிட்டதும், சீனத் தோழர்களுடன் திருத்தல் வாதத்திற்கு எதிராக கடுமையான நிலைபாட்டை மேற்கொண்டு தோழர் சாரு மஜூம்தார் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் குறிக்கோளுக்குப் புரட்சியைத் திரும்பக் கொண்டுவந்தார்.

தோழர் சாருமஜூம்தார் உயிர்த்தியாகம் செய்து 22 ஆண்டுகள் முடிந்துவிட்டன; தோழர் சாருவும், சி. பி. ஐ. (எம்-எல்) இயக்கமும் முன் வைத்த அடிப்படைக் கோட்பாடுகளை வரலாறு முற்றிலும் ஏற்றுக் கொண்டுவிட்டது. சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நொறுங்கிச் சிதறிய சூழ்நிலையில், அனைத்துத் திரைகளையும் விளக்கி புதிய காலனியாக இந்தியா வெளிப்படையாகவே காட்சியளிக்கும் இன்றைய நிலையில் திருத்தல்வாதிகளின் போலித் தத்துவத்தின் முகத்திரையைக் கிழித்துக் காட்டிவிட்டது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் தோழர் சாரு முன்வைத்த சரியான அணுகுமுறைகளை தன்வயப்படுத்திக் கொண்டு, இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்தை வலுப்படுத்தவும், நம்முடைய நாட்டின் விடுதலையை சாதிக்கவும், ஓய்வின்றி உழைக்கவும் போராடவும், சபதத்தைப் புதுப்பித்துக்கொண்டுதான் நம்மால் தோழர் சாருமஜூம்தாரை நினைவுகூரமுடியும்.

நாங்கள் சபதத்தைப் புதுப்பிக்கிறோம்;

உயிர்த்தியாகமளித்த அமரர் தோழர் சாருமஜூம்தாருக்கு சிகப்பு வாழ்த்துக்கள்...

படிப்பகம்

www.padippakam.com

திரிபு வாதத்தை முறியடிப்போம்! புரட்சிகர அரசியலை உயர்த்திப் பிடிப்போம்!



அமெரிக்க ஏகபோக முதலாளித்துவக் கும்பல்கள் தமது ஆக்கிரமிப்பு, யுத்தக் காள்கைகளை முன் நடத்துவதில் விடாப் பிடியாக நின்றால், உலக மக்கள் அனைவரும் அவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கும் நாள் நிச்சயம் வரும். அமெரிக்காவின் கூட்டாளிகளுக்கும் இதே நிலைமைதான் காத்திருக்கின்றது.

—தோழர் மாவோ

ஆகஸ்ட் 1994 மலர் 18 இதழ் 19

# ஆகஸ்டு 15

## ஏகாதிபத்திய எதிர்ப்பு தினமாக்குவோம்!

''வந்தே மாதரம்'' என்ற ஒரு பாடல்வரி இந்தியாவின் சுதந்திர போராட்டக் களத்தி லிருந்து எழுந்து கோடானுக் கோடி மக்களின் இதயங்களில் எதிரொலித்து நாடெங்கும் தேச பக்தி புயலை மூண்டெழ செய்தது.

இந்த பாடல் வரியை முழக்கியவாறு எண்ணற்ற தேச பக்தர்கள் தூக்குமேடை ஏறினார்கள். துப்பாக்கி குண்டுக்கு நெஞ்சை திறந்து காட்டினார்கள், இவ்வாறு அந்த பாடல் வரி நாட்டின் சுதந்திர போராட்ட எழுச்சியை தோற்றுவித்த மகத்தான இலட்சிய முழக்கமாக எங்கும் ஒலித்து எதிரொலித்துக் கொண்டே இருந்தது.

1947க்கு பின்னர் இந்த இலட்சியமுழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து மறைந்து போய்விட்டது; தொடக்கத்தில் சுதந்திரத்தின் பயன்கள் மக்களுக்கு கிடைக்காதபோது பள்ளிச் சிறுவர்களும், இளைஞர்களும் 'வந்தே மாதரம்' வந்து ஏமாத்துறோம் என்று சாதாரணமாக கூறத் தொடங்கினர். இதன் மூலம் அவர்களின் வெறுப்பை வெளிப்படுத்திக் கொண்டனர். இந்த தலைமுறை சிறுவர்களும் இன்னும் கீழேயிறங்கி 'வந்தேமாதரம்' வாயில் மூத்திரம் என்று சொல்லிக்கொண்டிருப்பதை கேட்கலாம்,

வந்தேமாதரம் என்போம்—அது எங்கள் மாநில தாயை வணங்குது என்போம்' என்று பாடிய பாரதியாரும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி-யும், சுப்பிரமணிய சிவாவும் இப்போது இருந்திருப்பார்களேயானால் சிறுவர்களின் இந்த இழிசொற்களை கேட்டு எவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்கள் என்பதை யாரும் புரிந்துகொள்ள முடியும், ஏன் சுதந்திர போராட்ட வரலாற்றுஉணர்வுள்ள அனைத்து தேச பக்தர்களும் இச்சொற்களை கேட்டு, தாங்க முடியாத வேதனைபடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் சிறுவர்களின் இந்த இழி சொல்லிலும் ஒரு ஆழமான உண்மையிருப்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

நீண்ட பயணம் முகவரி :
ஆசிரியரும், வெளியிடுபவரும்: எஸ். சுந்தரம், 14, 16வது அவின்யு, அசோக்நகர் சென்னை—83

படிப்பகம்

www.padippakam.com



## நவகாலனிய சுரண்டலுக்கு வழியமைத்தார்கள்

1947 ஆகஸ்டு 15, சுதந்திரம் பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து ஆண்டுதோறும் ஆகஸ்டு 15 விடிந்ததும் மக்கள் மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் சுதந்திரம் மற்றும் ஜனநாயக ஆட்சி முறைக்கான அரசியல் சட்டத்தை பாதுகாப்போம் என்று இந்தியாவில் ஆட்சியில் இருந்தவர்களும், ஆளும் வர்க்கங்களும் சபதம் எடுத்துக்கொள்வது வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஆனால் இந்த சபதத்தின் ஊடாக நூற்றாண்டு காலமாக நடைபெற்று வந்த சுதந்திர போராட்ட வரலாற்றுக்கு துரோகம் இழைத்துக் கொண்டு நவகாலனிய சுரண்டல் கொள்ளைக்கு வழி ஏற்படுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு மகுடம் சூட்டுவது போல் கடந்த ஏப்ரல் 15 ஆம் தேதி 'காட்' (GATT) ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது.

இத்துடன் நாட்டின் சகல அதிகாரங்களையும், சுதந்திரத்தையும் இதுபோன்ற அனைத்தையும் நேர்டியாக ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்படுத்தியும், காட் ஒப்பந்தப்படி வரும் ஜனவரி 1 முதல் உலக வணிக அமைப்பின் (WTO) நேரடியான ஆட்சிக்கு நாட்டை ஒப்படைக்கப் போகிறார்கள். 1947 ஆகஸ்டு 15 இந்தியாவின் சுதந்திர நாள் என்று சொல்லப்படுமானால், 1994 ஏப்ரல் 15 நேரடியாக நமது ஆளும் வர்க்கங்கள் 'காட்' மற்றும் உலக வணிக அமைப்பின்ஆட்சிக்கு நாட்டை எழுதிக் கொடுத்த நாளாகும். எனவேதான் ஏப்ரல் 15 காட் ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திடுவதை கடுமையாக எதிர்த்து தேச பக்தர்கள் நாடெங்கும் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு) செங்கொடி, வளர்ந்து வரும் கேரளா, ஆந்திரா, கர்னாடக மாநிலங்களில் பந்த் நடைபெற்றதை யாவரும் அறிவார்கள்.

காட் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்ட சம்பவம் எதிர்பாராததோ ஏதாவது ஒரு நிகழ்ச்சிப் போக்கின் விளைவாகவோ அல்லது ஏதோவொரு அரசு அதிகாரியின் கெட்ட நோக்கத்தின் விளைவாகவோ ஏற்பட்டதல்ல. மாறாக ஏகாதிபத்தியம் இந்திய ஆளும் வர்க்கத்தை அது சுரண்டி கொள்ளையடிக்கும் பாதையில் படிப்படியாக செயல்படுத்தி வந்திருக்கிறது. அதுவே நாடு இந்த நிலைக்கு வந்து சேர்ந்திருப்பதற்கான காரணம். 1947வரை சுதந்திரம் கிடைத்தால் நாட்டில் பாலும் தேனும் பெருகெடுத்து ஓடவைப்போம் என்று கூறியவர்கள் மக்களின் அடிப்படை தேவைகளையும், ஆசைகளையும், கனவுகளையும் கூட நிறைவேற்ற எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த இரு நூற்றாண்டு காலம் நம் நாட்டின் அளவற்ற செல்வங்களையும், மக்களின் உழைப்பையும் சுரண்டி கொள்ளையடித்து போன பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இங்கே போட்டிருந்த மூலதனத்தில் சல்லிக் காசைக்கூட சுதந்திர அரசு என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசு பறிமுதல் செய்யவில்லை. மாறாக அந்நிய மூலதனத்தை தேசிய மூலதனமாக அங்கீகாரம் செய்து கொண்டு மேலும் மேலும் அந்நிய மூலதனங்களை வரவழைத்துக் கொண்டே இருந்திருக்கிறது. இவ்வாறு நாட்டின் முன்னேற்றத்திற்கான பொறுப்பு அனைத்தையும் உலக வங்கிக்கு ஒப்படைத்தவண்ணம் இந்தியாவின் ஆளும் வர்க்கங்கள் முன்னேறி வந்துள்ளன.

சர்வதேச ரீதியில் பழைய காலனிய முறை காலாவதியாகிவிட்டநிலையில்மேலும் அதை தொடரமுடியாமல் ஏகாதிபத்தியங்கள் புதிய காலனிமுறை திட்டத்தை உருவாக்கி நடப்புக்கு கொண்டுவந்தனர், எனவே 1947ல் இந்தியாவில் பிரகடனம் செய்யப்பட்ட சுதந்திரமும், காலனி நாடுகள் அனைத்திலும் ஒன்றன்பின் ஒன்றாக பிரகடனம் செய்யப்பட்ட சுதந்திரமும் வெறும் பெயரளவுக்கான போலி சுதந்திரமாகவே இருந்தது. இப்படி பெயரளவுக்கு சுதந்திரம் பெற்ற அனைத்து நாடுகளிலும் ஏகாதிபத்தியம் அதன் சுரண்டல் கொள்ளையை மேலும்

படிப்பகம்

www.padippakam.com



தீவிரப்படுத்தவே உலக வங்கி, IMF GAAT போன்ற அமைப்புகளை உருவாக்கியது.

### ஏகாதிபத்தியம் கொள்ளையடிக்க சுதந்திரம்

இந்தியாவில் மேற்கண்ட அமைப்புகளின் கீழ் இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகள் மக்களுக்கு எவ்விதமான சுதந்திரமான உரிமைகளையோ, சுபிட்சமான வாழ்க்கையையோ படைத்து கொடுக்க முடியாதென்று அன்றே கம்யூனிஸ்டுகள் மற்றும் முற்போக்கு வாதிகள் எச்சரித்திருந்தனர். அவர்கள் விடுத்த எச்சரிக்கை எவ்வளவு சரியானதாக இருந்தது என்பதை இப்போது தெளிவாக புரிந்துகொள்ள முடிகிறது.

வறுமை மற்றும் தொற்று நோய்களை போக்கவோ இந்த அரசினால் முடியவில்லை என்பது மட்டுமல்ல, மக்களுக்கு அடிப்படை கல்வியைகூட வழங்க முடியாமல் போய் விட்டது. உலகத்தில் கல்வியறிவற்ற நாடுகளில் நம் நாடு முதன்மையான இடத்தில் உள்ளது. மக்கள்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கிறார்கள். காசநோய், குஷ்டம், யானைக்கால் போன்ற கொடிய நோய்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இந்தியாவில் மிக அதிகம் என கணக்கிடப்பட்டிருக்கிறது.

1947ல் இந்தியா ஒரு ரூபாய் கூட வெளிநாட்டிலிருந்து கடன் வாங்கியிருக்கவில்லை. ஆனால் அதன் பின்னர் அமைந்த அரசின் கொள்கைகள் விளைவாக படிப்படியாக அந்நிய கடன் பெறுவது தொடர்ந்தது. இதனால் அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்பட்டது. இதை தொடர்ந்து நம் அரசு IMF-ல் கடன் வாங்க முடிவெடுத்தது. நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனமான நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் இக்கடன்கள் பெறப்பட்டன. IMFன் இத்தகைய நிபந்தனைகளை பாராளுமன்றத்திற்கு கூட தெரிவிக்காமல் மூடிமறைத்த வரலாறு இந்த அரசுக்கு உண்டு. IMF-லிருந்து வாங்கும் கடனின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தப் போவதாக மிகப்பெரிய அளவுக்கு அப்போது ஆளும் வர்க்கத்தினரும், அவர்களின் ஆஸ்தான அறிவு ஜீவிகளும், பொருளாதார நிபுணர்களும், கூலி எழுத்தாளர்களும், ஏக போக பத்திரிக்கையாளர்களும் ஆரவாரமாக பிரச்சாரம் செய்தனர். ஆனால் அதன் போலித்தனம் அதிவேகமாக அம்பலமானதும் அந்நிய செலாவணி நெருக்கடி தீவிரமானது.

இந்தியாவைப்போல் நவகாலனியத்திற்கு உள்ளாகியிருக்கும் முன்னால் காலனி நாடுகளின் பொருளாதார நெருக்கடியோடு ஏகாதிபத்திய நாடுகளிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இந்நிலையில் நிபந்தனைகளுக்கு அடிமையாகியிருக்கும் 'ஆமாம் சாமி' ஆட்சியாளர்களின் நிலை எந்த ஏகாதிபத்திய நாட்டின் நிபந்தனைகளையும் ஏற்று அமுல் நடத்துவதாக இருந்தது.

சோவியத் அணியின் வீழ்ச்சியால் உருவான புதிய உலக சூழ்நிலைமையில் இனிமேல் 'காட்'-டை புதிய பயங்கர சுரண்டல்நிறுவனமாக மாற்றுவதென்று ஏகாதிபத்தியம் தீர்மானித்தது நவகாலனி நாடுகளின் விவசாயம் மற்றும் தொழில் துறையையும், கல்வி, சுகாதாரம் போன்ற பொது சேவை நிறுவனங்கள் மற்றும் அனைத்து துறைகளையும் ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோக நிறுவனங்களிடம் ஒப்படைத்து மேற்பார்வையிடுவதற்கான 'உலக வணிக அமைப்பை' உறுதிப் படுத்துவதே இன்றைய 'காட்' ஒப்பந்தம்.

இதற்கு முன்வரை இருந்த அறிவுச் சொத்துடைமை, சேவைத்துறை, முதலீட்டு நிபந்தனைகள் மற்றும் உறுதிப்பாடுகள் என்று பலவும் 'காட்'-டின் எல்லைக்குள் உட்படாதிருந்தவற்றை உள்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் உத்திரவாதப்படுத்தியிருந்த கல்வி, சுகாதார உரிமைகள் மற்றும் நியாயவிலைக் கடைகள் போன்றவற்றை மறுப்பதன் மூலமாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தையும் செயலற்றதாக்கி 90% ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை

படிப்பகம்

www.padippakam.com



மேலும் கொடுமை நிறைந்ததாக மாற்றியமைப்பதற்கும் 'காட்' ஒப்பந்தம் நிபந்தனை விதிக்கிறது.

விவசாயத்தை முழுவதுமாக ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு திறந்துவிட்டு அனைத்து மானியங்களையும் ரத்து செய்யும்படியும் 'காட்' ஒப்பந்தம் நிர்பந்திக்கிறது. ஊதியத்தை குறைத்தல், அனைத்து துறைகளையும் இலாப நோக்க அடிப்படையில் மறு ஒழுங்கு செய்து சர்வதேச நிதி மூலதனத்திற்கு அனைத்து துறைகளையும் திறந்து விடுவது என்பதே 'காட்' ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

## நமது வீரஞ்செறிந்த சுதந்திர போராட்ட பாதையில் முன்னேறுவோம்

ஏப்ரல் 15-ல் காட் ஒப்பந்தத்தில் கையெழுத்துபோடுவதற்கு முன் காங்கிரசும், அதன் பிற அடிவருடிக் கட்சிகளும் சொல்லி வந்தது என்னவென்றால் நாம் நமது நாட்டில் மானியத்தை குறைக்க வேண்டியதில்லை. 'காட்' ஒப்பந்தத்தில் கையெழுத்து போடுவதன் மூலம் விவசாயிகளுக்கு நன்மைதான் ஏற்படும் என்பதாகும். ஆனால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகி ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே இவர்களுடைய அனைத்து பொய்ப் பிரச்சாரங்களும் அம்பலப்பட்டு விட்டது, 1992-ல் உரமானியம் அதிகமாக குறைக்கப்பட்டதை தொடர்ந்து இன்று மறுபடியும் மானியத்தை குறைத்துவிட்டு உரத்தின் விலையை இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. இனி பெரும்பாலான உரங்களுக்கு மானியம் அளிக்க முடியாது என்றும், அந்த உரத்தின் விலைகளை அதன் உற்பத்தியாளர்களே தீர்மானிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டுகளுக்குமுன் அரிசிக்கும், கோதுமைக்கும் இரண்டு மடங்கு விலை உயர்த்திய பிறகு இனி வருகின்ற அக்டோபர் மாதம் மேலும் 60 காசுகள் உயர்த்தப்போவதாக அறிவித்துள்ளனர். ரேசன் சர்க்கரை விலை உயர்த்தப்பட்டு, அளவு குறைக்கப்பட்டிருக்கிறது, சமையல் எரிவாயு மற்றும் மண்ணெண்ணையின் விலையும் அதிகரித்திருக்கிறது. நாட்டின் உணவு தானிய உற்பத்தி அதிகரித்திருக்கின்றபோதும் அதன் விலை அரசினுடைய தற்போதைய கொள்கையின் விளைவாக ஏறிக்கொண்டே இருக்கிறது. பணவீக்கம் இந்திய வரலாற்றிலேயே அதிகமாக பயமுறுத்துகின்ற வகையில் 13—14 சதவிகிதத்தில் வாரக் கணக்கில் தீவிரமாகிக்கொண்டிருக்கிறது.

ஆனால் இன்று சுதந்திரத்தைப்பற்றியும், நாட்டுப்பற்றைக் குறித்தும் பேசி நாட்டுப்பற்றுள்ளவர்களாக தங்களை காட்டிக் கொள்கின்ற ஆளும் வர்கக் கட்சிகள் அனைத்தும் விடுதலைக்கான இந்த போராட்டத்திற்கு துரோகமிழைத்து வருகின்றனர். இன்றைய ஆளும் கட்சியான காங்கிரசும், அதன் அடிவருடிகளும் மட்டுமல்ல, மற்ற ஓட்டிக் கட்சிகளும் இதைத்தான் செய்து வருகின்றன,

காங்கிரசும், அதன் கூட்டாளிகளும், மற்றஓட்டுக் கட்சிகளும் 'காட்' ஒப்பந்தமும், 'உலக வணிக அமைப்பி'னுடைய ஏகாதிபத்திய நுகத்தடியில் அடிமைப்படுவதைவிட நமக்கு வேறு வழியில்லை என்று கூறுகின்றனர், அதே சமயம், இந்த 'காட்' ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக பிற ஆளும் வர்க்க கட்சிகளும், அவர்களுடைய வெகு ஜன அமைப்புகளும் கூறுகின்றன. முக்கிய எதிர்கட்சியான 'பி ஜே பி, 'காட்' ஒப்பந்தத்தை எதிர்ப்பதாக நாடகமாடுகிறது. அதற்கு காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு மாற்றான ஏகாதிபத்திய அடிமைத்தனத்தை உறுதியாக எதிர்ப்பதற்கான எந்த மாற்று திட்டமும் இல்லை. இதுமட்டுமல்ல மத அடிப்படை வாதத்தை தூண்டி விட்டு மக்களின் ஒற்றுமையை உடைத்து அதன் மூலம் ஏகாதிபத்திய சுரண்டலை எளிதாக்குவதற்கும் முயற்சி செய்து வருகிறது. இன்னொரு புறம், தேசிய முன்னணி, இடதுசாரி கட்சிகள் IMF, உலக வங்கி மற்றும் காட் ஒப்பந்தங்களை தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் தனதுஆட்சிக்கு குந்தகம் ஏற்படாத விதம் நடைமுறைபடுத்தியும், ஆட்சியில் இல்லாத இடங்களில்

www.padippakam.com



எதிர்த்து பல வடிவிலான போராட்ட முறைகளையும் அறிவிக்கிறது, இன்று நாடு பூராவும் வளர்ந்து வருகின்ற ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுடன் நிற்பதாக காட்டிக்கொண்டு அந்த உணர்வுகள் மூலம் அரசியல் இலாபம் தேடுவதை தவிர அவர்களுக்கு IMF, உலக வங்கி, காட் மற்றும் உலக வணிக அமைப்புக்கு எதிராக எந்தவித திட்டவட்டமான கொள்கையும் இல்லை,

இன்று, இப்படிப்பட்ட நிலைமையில் மக்களை நேசிக்கின்ற நாட்டுப் பற்றுள்ள ஒவ்வொரு மனிதனும் நமது நாட்டின் விடுதலைக்கான பாதையில் இந்த 'காட்—உலக வணிக அமைப்பு' (GATT-WTO) ஆதிக்கத்திற்கு எதிராக ஓரணியில் இணைய வேண்டியது சுதந்திரத்தை விரும்புகின்ற ஒவ்வொரு மனிதனுடைய மாபெரும் கடமையாகும். இரண்டு நூற்றாண்டுகள் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய வரலாறுதான் நமது வரலாறு. இந்த வரலாற்று பாரம்பரியத்தை உயர்த்திப் பிடித்து நமது நாட்டின் விடுதலைக்காக போராடிய தியாகிகளுக்கு நாம் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த சந்தர்ப்பததை பயன்படுத்திக் கொள்ளும்படி அனைத்து தரப்பு மக்களிடமும் கேட்டுக் கொள்கிறோம்,

---

# தோழர் கன்சாலோவை விடுதலை செய்யக் கோரி சர்வதேச இயக்கம் தொடர்ந்து பலம்பெற்று வருகிறது

பெருநாட்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தோழர் கன்சாலோ என்று அழைக்கப்படும் டாக்டர் குஸ்மானை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியாக பெரு நாட்டில் ஆட்சி நடத்தி வரும் பிஜுமொரி அரசின் இராணுவம் கைது செய்ததும், பின்னர் இராணுவக் கோர்ட்டில் விசாரணை நடத்தி ஆயுள் காலம் முழுவதும் சிறை தண்டனை விதித்து பாதாள சிறையில் அடைத்து வைத்திருப்பதை வாசகர்கள் அறிவார்கள்.

இன்றுவரை அவரை வழக்கறிஞர்கள் மற்றும் பொது ஜன பிரதிநிதிகள் மட்டுமின்றி அவர் குடும்பத்தினர்கூட அவரை சிறையில் சந்தித்து பேச பிஜுமொரியின் காட்டாச்சி அனுமதிக்கவில்லை. எனவே அவர் சிறையில் எப்படி இருக்கிறார் என்ற செய்தி உலகத்துக்கு கிடைக்காமல் இருந்து வருகிறது. ஆனால் அவர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக் கொண்டு விட்டார் என்றும் கிறித்துவ மதத்தில் சேர்ந்து விட்டாரென்றும் இன்னும் இது போன்ற பொய் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டதின் மூலம் தோழர் குஸ்மான் உறுதி குலையாத நெஞ்சத்துடன் கொடுஞ்சிறையிலும் எதிரிகளை எதிர்த்து மாவீரத்துடன் போராடிக் கொண்டிருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது. இன்பத்திற்காகவே பிறந்தோம்; இன்பத்திற்காகவே வாழ்ந்தோம்; இன்பத்திற்காகவே போராடினோம்: இன்பத்திற்காகவே இப்போது மரிக்கவும் தயாராக உள்ளோம் என்று கொடுங்கோலன் இட்லரின் கஸ்டபோ சிறைக் கூடத்தில் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட 'செக்'கு நாட்டின் கம்யூனிஸ்டு தலைவரும் மாவீரருமான தோழர் ஜுலியஸ் பியூசிக் தன் சிறை குறிப்பில் எழுதினார். தோழர் குஸ்மான் தனது வாழ்க்கையிலும் இதை நிருபித்துக் கொண்டிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



## விடுதலை செய்யக்கோரி சர்வதேச அமைப்பு

தோழர் கன்சாலோவை விடுவிக்க அமைக்கப்பட்ட சர்வதேச அவசரக் கமிட்டியின் சார்பில் ஐந்தாவது முறை பெருவுக்குச் சென்று சிறையில் தோழர் கன்சாலோவை சந்திப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது பிஜுமொரி அரசுக்கு மேலும் மேலும் நெருக்கடிகளை உண்டாக்குவதாக இருந்த போதிலும் தோழர் கன்சாலோவை சந்திக்க அந்த அரசு அனுமதிக்க மறுத்து வருகிறது. அதேசமயம் உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும், குறிப்பாக லத்தின் அமெரிக்க நாடுகளிலிருந்து தொடர்ச்சியாக ஒருவர் பின் ஒருவராக புகழ்பெற்ற வழக்கறிஞர்கள் பெருவுக்குச் சென்று தோழர் கன்சலோவை சந்தித்து அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மே 30ஆம் தேதி அவசரக் கமிட்டியின் அறைகூவலை ஏற்று உலகம் முழுவதும் தோழர் கன்சலோவை விடுதலை செய்யக் கூறும் சர்வதேச நடவடிக்கை தினமாக மேற்கொள்ளப்பட்டது. கொலம்பியா, மெக்சிகோ, பொலிவியா போன்ற தென் அமெரிக்க நாடுகளிலும், அமெரிக்கா, இத்தாலி, ஆஸ்திரியா போன்ற மேற்கத்திய நாடுகளிலும் பெரு மற்றும் அமெரிக்க தூதரக முற்றுகைப் போராட்டங்கள் நடைபெற்றன.

சமீபத்தில் கன்சலோவை விடுவிப்பதற்கான சர்வதேச அவசரக் கமிட்டியினர் ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அழைப்பின் பேரில் அங்கு சென்ற அவர்களை பிலிப்பைன்ஸில் பாயன் என்ற அமைப்பு வரவேற்றது, பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து அவர்களை உரையாற்ற செய்தனர். இந் நிகழ்ச்சிகளின்போது பெரு மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் நிலவும் அரசியல் பொருளாதார நிலைமை மற்றும் அவர்களை அடக்கியாளும் வல்லரசுகளுக்கிடையேநிலவும் ஒற்றுமை மற்றும் முரண்பாடுகள் பற்றியும இவ்விரு நாட்டு மக்களின் வீரஞ்செறிந்த போராட்ட வரலாறு எடுத்துக்காட்டப் பட்டன. தோழர் கன்சலோவைப் போலவே பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தோழர் மரியா சீசனும் சிறைபிடிக்கப்பட்டு தனிமை கொடுஞ் சிறையில் 9 ஆண்டு காலம் வைக்கப்பட்டிருந்தார். பிலிப்பைன்ஸ் நாட்டு மக்களின் போராட்டங்களாலும், உலக மக்களின் ஆதரவினாலும் அவர் பின்னர் விடுவிக்கப்பட்டார்.

பெரு நாட்டு அதிபர் பிஜுமொரி ஜப்பானிய இனத்தைச் சேர்ந்தவன். இதை ஒரு காரணமாக வைத்து ஜப்பானிய பிற்போக்கு அதிகார வர்க்கம் பிஜுமொரிக்கு நிதி உதவி அளித்து அவனுக்கு ஆதரவுகாட்டி வருகிறது. ஜப்பானிய பத்திரிக்கைகளும் அவனுக்கு ஆதரவாக எழுதி வந்தன. அவசரக் கமிட்டி உறுப்பினர்களின் ஜப்பானிய சுற்றுப்பயணம் பிஜுமொரியின் முகத்திரையைக் கிழித்து அவனுடைய உண்மையான தோற்றத்தை ஜப்பானிய மக்களுக்கு அம்பலப்படுத்தியது. அவசரக் கமிட்டிக்கு பல முற்போக்கு சக்திகளும், இடதுசாரிகளும் ஆதரவு அளித்தனர். ஜப்பானிலும் ஒரு அவசரக் கமிட்டி அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன,

தோழர் கன்சலோவை பாதாள சிறையில் அடைத்து வைத்தோ, படுகொலை செய்தோ பெரு நாட்டு மக்களின் புதிய ஜனநாயக புரட்சியையோ, உலகத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களையோ, கம்யூனிஸ்டு இயக்கங்களையோ ஒடுக்கி அடக்கிவிட முடியாது. அதன் மூலம் ஏகாதிபத்தியம் தன்னை பாதுகாத்துக்கொண்டுவிடமுடியாது. போன நூற்றாண்டில் சிகாகோ நகரில் தொழிலாளர்கள் நடத்திய மே தினப் போராட்டம் அனைவருக்கும் தெரியும். அந்தப் போரட்டத்திற்கு தலைமை தாங்கிய தலைவர்கள் தூக்கிலிடப்பட்டனர். அவர்களில் ஒருவர் நீதிமன்ற விசாரணையின் போது ஒரு உண்மையை தெளிவாக எடுத்துக் காட்டினான். பூமிக்கு அடியில் நெருப்பு மூண்டுவிட்டது. இனி அதை அணைக்க யாராலும் முடியாது என்பதே அந்த உண்மை, அதற்கு பின்னர் நடைபெற்று வந்துள்ள உலக வரலாறு நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர் கூறியது எத்தகைய பெரிய உண்மை என்பதை தொடர்ந்து தெளிவுபடுத்தி இருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழகத்தில் இட ஒதுக்கீட்டு போராட்ட போட்டிகள்

மக்களின் அடிப்படை பிரச்சனைகளிலிருந்து கவனத்தை திசைதிருப்ப ஆளும் வர்க்கங்கள் எத்தகைய முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்று தமிழகத்தில் இடஒதுக்கீட்டு போராட்ட போட்டிகள் நடைபெற்று வருகின்றன,

தமிழகத்தில் 69 சதவீதம் இடஒதுக்கீடு இருந்து வந்தது, ஆனால் மத்தியிலோ, மாநிலத்திலோ 50 சதவீதத்திற்கு மேல் இடஒதுக்கீடு இருக்கக்கூடாது என்று சுப்ரீம்கோர்ட் தீர்ப்பு வழங்கியதை தொடர்ந்து இங்கு 50 சதவீதத்திற்கு சுருக்கிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே இடஒதுக்கீட்டுக்கான போராட்ட போட்டிகள் உருவாயின.

ஜெ அரசு 69 சதவீத இடஒதுக்கீட்டுகான ஒரு மாசோதாவை சட்டசபையில் நிறைவேற்றியது. அந்த மாசோதாவுக்கு ஜனாதிபதி அங்கிகாரம் வழங்க வேண்டுமென்று இந்த போராட்ட போட்டிகள் துவங்கின.

69 சதவீத இடஒதுக்கீடை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அரசியல் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டுமென்பதை அனைத்துக் கட்சிகளும் ஆதாரிப்பதாக நடித்து வருகின்றன. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் காவலர்கள் தாங்கள்தான் என்று காட்டிக் கொள்ளவே இந்த நாடகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதுவே இந்த போராட்ட போட்டியின் பின்னணியாக இருக்கிறது:

கருணாநிதி போராட்ட அறிவித்த அதேதேதியில் ஜெ அரசு, அரசு அலுவலகங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் விடுமுறை விடுத்து மூழு அடைப்பை வெற்றிகரமாக நடத்தி இந்த போராட்ட போட்டியை தொடங்கி வைத்தார். இதன் மூலம் இடஒதுக்கீட்டு போராட்ட போட்டியின் சாம்பியன் நான்தான் என்று மார்தட்டிக் கொண்டார். இதனால் ஏமாற்றமடைந்த தி. மு. க. ஜெயலலிதா மக்களை ஏமாற்றுகிறார். இடஒதுக்கீட்டுக்கான போராட்டங்களை இதைவிட தீவிரமாக நடத்த வேண்டுமென்று கூறி களத்திற்கு வந்தது. ஜெ, அரசு உடனே போலீசை தன் கட்சி நலனுக்கு பயன்படுத்தும் வகையில் தான் பந்த் நடத்திய பிறகு இனி யாரும் போராட்டங்களை நடத்தக்கூடாது என்று கூறி ஆயிரக்கணக்கான தி. மு. க. தொண்டர்களை கைது செய்தது:

இதோடு 69 சதவீத இடஒதுக்கீட்டுக்கான மசோதாவுக்கு ஜனாதிபதியின் ஒப்புதல் பெறுவதற்காக டில்லி செல்ல ஜெ தலைமையில் அமைக்கப்பட்ட குழுவில் பங்கெடுத்துக் கொள்ள தி. மு. க, காங்கிரஸ், CPI, (M) கட்சிகள் மறுத்துவிட்டன.

வேடிக்கை என்னவென்றால் மேலே கண்ட நிலைமையை பயன்படுத்திக் கொண்டு டில்லி செல்லவிருக்கும் பிரதிநிதி குழுவில் பங்கெடுத்துக்கொள்ள பி, ஜே. பி. மிக உற்சாகத்துடன் முன் வந்தது. இதுதான் மிக ரசகரமான சம்பவமாகும்.

1989-ல் வி. பி. சிங் ஆட்சி காலத்தில் மண்டல் அறிக்கையும், இடஒதுக்கீடும் இந்து சமுகத்தை பிளவு படுத்திவிடும் என்று பெரும் கூச்சல் போட்டு பி. ஜே. பி. நாடெங்கும் பெரும் கலவரத்தை தூண்டியது, அது எவ்வித பலனும் தாராமல் போகவே அமைச்சரவையை கவிழ்க்க ரத யாத்திரை நடத்தியது. அதே பி. ஜே. பி. தான் இப்போது தமிழகத்தில் 69 சதவீத இடஒதுக்கீட்டை ஆதரித்து தம்பட்டம் அடித்து கொண்டிருப்பது ஆளும் வர்க்க கட்சிகளின் சந்தர்ப்பவாத அரசியலை அம்பலப்படுத்துகிறது.

69 சதவீத இடஒதுக்கீடு தங்களின் கொள்கையென்று காங்கிரஸ் அறிவித்திருந்த போதிலும் மத்தியில் தங்கள் கட்சி ஆட்சியில் இருப்பதினால் அதை எதிர்த்துப் போராட்டம் நடத்த முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது, தி. மு. கவும், வை, கோ (க)வும் தொடர்ந்து போராட்டங்கள் நடத்துவோம் என்று அறிவித்துள்ளன. இதுபோல் சிறிது காலத்திற்கு முன்

படிப்பகம்

www.padippakam.com



காவிரி என்பதுபோல் இப்போது இட ஒதுக்கீடு பிரச்சனை மிகப்பெரிய பிரச்சனையாக்கப்பட்டிருக்கிறது. ஆட்சியில் இருக்கும் ஜெயலலிதாவின், மக்கள் விரோத நடவடிக்கைகளை மூடி மறைப்பதற்கும், ஓட்டு வங்கியை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், இந்த நாடகம் அவசியப்படுகிறது. எதிர்கட்சிகள் இந்த நாடகத்தை அம்பலப்படுத்துவதற்கு பதில் ஜெயலலிதாவிற்கு உயர்ந்தபட்சமாக உதவும் வகையில் செயல்பட்டு வருகின்றனர்.

## மக்கள் விரோத நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்கே இந்த நாடகம்

ஜெயலலிதாவின் ஆட்சி தொடக்க முதலே மக்கள் விரோத ஆட்சியாக நடைபெற்று வருகிறது. ஐ, எம், எப்—உலக வங்கி கட்டளைக்கு கீழ்படிந்து பஸ் மற்றும் மின்சார கட்டணங்களை பலமுறை உயர்த்தியிருக்கிறது, கமிஷன் பெற்றுக் கொண்டு ஏராளமான பொதுத்துறை நிறுவனங்கள் ஏகாதிபத்திய ஏகபோக நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன, உதாரணமாக நெய்வேலி அனல் மின்நிலையத்தின் ' அடுத்த யூனிட்டான O யூனிட்டை ஒரு அமெரிக்க ஏகபோக நிறுவனத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறலாம், கல்வி, சுகாதாரம், ரேஷன் போன்ற அனைத்துத் துறைகளிலும் ஐ.எம்.எப் உலக வங்கி ஆதிக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன,

விலைவாசி உயர்வு தாங்க முடியாத அளவிற்கு போய் விட்டது. குழந்தை உழைப்பு, பெண் சிசுக்கொலை, லாக்கப் படுகொலை, கற்பழிப்புகள், குழந்தைகள் விற்பனை போன்ற பயங்கர நிகழ்ச்சிகள் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. நாடே போலீஸ் ராஜ்யமாக மாறி போய் விட்டது. அரசும், தொழிற்சாலை நிர்வாகிகளும் தொழிலாளருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்க்கொண்டு வருகின்றனர். மத்திய அரசு உரவிலை உயர்த்தியும், மாநிலரசு மின்சார கட்டணம் உயர்த்தியும் விவசாயிகளை ஒட்டாண்டிகளாக்கி வருகின்றனர். மக்களின் இத்தகைய அடிப்படை பிரச்சனைகளை மையப்படுத்தி மக்களை திரட்டி போராட முன் வராத எதிர்கட்சிகள், ஜெயலலிதா அடிக்கடி மக்களின் கவனத்தை திருப்புவதற்காக எடுக்கும் காவிரி பிரச்சனை, இட ஒதுக்கீடு பிரச்சனை, LTTE வேட்டை போன்றவைகளுக்கு பின்னால் சென்று சாராம்சத்தில் ஜெயலலிதாவின் அரசியலைப் பலப்படுத்துவதற்கு உதவி வருகின்றனர். நடைபெற்ற உபதேர்தல்களில் ஜெயலலிதா மக்களின் பெரும்பான்மை ஓட்டுகளை பெற முடிந்திருப்பதே இதற்கு ஆதாரமாகயிருக்கிறது,

மேலே கூறியதுபோல் ஏகாதிபத்தியங்களின் உத்தரவுகளுக்கேற்ப கட்டவிழ்த்து விடப்படும் மக்கள் விரோத நடவடிக்கையின்மூலம் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கபடக் கூடியவர்கள் தாழ்த்தப்பட்ட—பிற்படுத்தப்பட்ட மக்களாகவே உள்ளனர் பசி பட்டினியாலும், வேலையின்மையாலும், விவசாயதுறையிலும், தொழிற்துறையிலும் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சியினாலும் 'குதிரை கவிழந்ததோடு, குப்புற கவிழ்ந்தது' என்பதுபோல் மேற்கண்ட வகையில் பாதிக்கப்பட்ட அனைவரையும் ஏமாற்றுவதற்காகதான் ஜெயலலிதாவும், அவருடைய கூட்டாளிகளும் இடஒதுக்கீட்டு போராட்ட போட்டியை தொடங்கி வைத்துள்ளனர்.

ஆளும் கட்சிகளும், எதிர்கட்சிகளும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் காவலர்கள் என்று காட்டிக்கொள்ள நடத்திக் கொண்டிருக்கும் இந்த மோசமான போராட்ட போட்டியின் நாடகத்தை அம்பலப்படுத்துவது—முற்போக்கு—ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.

இட ஒதுக்கீடு என்பது நூற்றாண்டுகளாக அடிமைப்படுத்தப்பட்ட சமுதாய பிரிவினருக்கான ஜனநாயக உரிமையே ஆகும். இவர்களின் முழுமையான விடுதலை என்பது விவசாய புரட்சியினால்தான் முடியும். ஆனால், வர்க்க ரீதியான முரண்பாட்டை சமூக புரட்சியின் மூலமாகத்தான் முடிக்க முடியும். —எஸ். சுந்தரம்

படிப்பகம்

www.padippakam.com



# வழக்கு மன்றத்தில் பகத்சிங் முழக்கம்



சோஷலிஸ கபட வேடதாரி தேவன்சமன்லால் வருணித்திருப்பதைப் போல, அடுத்தவர் உரிமைகளை அநியாயமாக ஆக்கிரமிப்பு செய்து சூறையாடி அதன் மூலம் இந்நாட்டுக்கு அவமானத்தைத் தேடித் தருபவர் களாகவோ, அல்லது லாகூர் சதி வழக்கு விசாரணைக் குழுவினரும், மற்ற சில பேர்களும் எண்ணிக் கொண் டிருப்பது போல பைத்தியக்காரர்களாகவோ நாங்கள் இல்லை.

எங்கள் நாட்டின் நிலை, அம்மக்களின் இதய தாகம் இவைகளை ஆழமான முறையில் புரிந்து கொண்டுள்ள சரித்திரத்தின் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் நாங்கள் என்பதற்கும் மேலாக எங்களைப்பற்றி நாங்கள் வேறெது வும் உரிமை கொண்டாடவில்லை.

பிறந்ததிலிருந்து தன்னுடைய உதவாக்கரைத் தன்மையை உணர்த்திக் கொண்ட தோடு மட்டுமல்லாமல், மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அட்டூழியங்களுக்குத் திரை போட்டு பாதுகாப்பும் அளிக்கின்ற இந்தப் பாராளுமன்ற அமைப்பை எதிர்த்துத்தான் எங்களுடைய பேர்ராட்டம்.

எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து ஆராய்ந்தாலும் அவ்வளவுக்கவ்வளவு இந்தியப் பாராளுமன்றமானது, இந்திய மக்களின் அவல நிலைமையையும், நிராதரவான தன்மையையும் உலக அரங்கில் பறைசாற்றுவதற்காகவே இருக்கிறது என்பது விளங்குகிறது; பொறுப்பற்ற எதேச்சாதிகார ஆட்சியின் சின்னமாக அது விளங்குகிறது.

மக்கள் பிரதிநிதிகளால் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட தேசியக் கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்பட்டு குப்பைத் தொட்டியில் தூக்கி எறியப்பட்டன.

சபையால் நிறைவேற்றப்பட்ட புனிதமான தீர்மானங்கள், ''இந்தியப் பாராளு மன்றம்'' என்றழைக்கப்படும் அந்த மன்றத்திலேயே, கேவலமான முறையில் காலடியில் போட்டு மிதிக்கப்பட்டன.

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நிராகரிக்கப்பட்ட அரசின் தீர்மானங்கள், மசோதாக்கள் அடக்குமுறைச் சட்டங்கள் ஆகிய அனைத்துமே பேனா முனையின் ஒரு அசைவினால் மீண்டும் அமுலுக்கு வருகின்றன.

சுருக்கமாக, இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருப்பதற்கான நியாயத்தைக் கண்டு பிடிப்பதில் எவ்வளவு நேர்மையாக முயன்ற போதிலும் பூரணமான தோல்விதான் மிஞ்சுகிறது.

இலட்சக்கணக்கான பாட்டாளிகளின் இரத்தத்தாலும் வியர்வையாலும் விளைந்த செல்வத்தைச் சுரண்டி, எவ்வளவுதான் படாடோபமாகவும், டாம்பீகமாகவும், ஆரவாரத் துடனும் அலங்கரிக்கப்பட்டிருந்த போதிலுமாக இந்த பாராளுமன்றம் ஒரு கேலிக்கூத்து (Hollow Show) மக்களை முட்டாள்களாக்க நினைக்கும் குறும்புத்தனமான முயற்சி.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய மக்களைக் கேவலமான, அடிமை நிலையில் வைத்துத் திறமையாகச் சமாளிக்க உதவும் இந்தப் பாராளுமன்றத்திற்காக, பொது மக்களுடைய பணத்தையும் நேரத்தையும் பாழடிக்கத் துணைபோகும் தலைவர்களின் மனப்போக்கைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டோம்.

சுரண்டல் கொள்ளைக்காரர்களின் அதிகாரத்தின் சின்னமாக பறைசாற்றிக் கொண்டிருக்கும் இந்தியப் பாராளுமன்றத்திலிருந்து இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள் எதிர் பார்ப்பதற்கு ஒன்றுமில்லை.

இருபதாம் நூற்றாண்டின் உதயத்தோடு, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அதிகார வர்க்கமும் இந்தியா பற்றிய தன் போக்கில் ஒரு புதிய கொள்கையை கடைபிடித்து வருகிறது.

இந்திய முதலாளிகளுக்குச் சில சலுகைகளை வீசி எறிவதன் மூலம் அவர்களைத் தங்களுடைய பிடிக்குள் இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் அதிகரித்து வரும் பிரிட்டிஷ் மூலதனத்தின் முதலீடு தவிர்க்கமுடியாத படி இந்நிலைக்குத்தான் கொண்டு செல்லும்.

கூடிய விரைவிலேயே இந்திய முதலாளி வர்க்கமும், அதனுடைய பெருந் தலைவர்களும், அந்நிய ஆட்சியிடம் சரணடைந்து, தங்கள் நலன்களை அவர்களோடு இணைத்துக் கொள்வதை நாம் பார்க்க முடியும்.

ஒரு வட்ட மேசை மகாநாடு அல்லது அம்மாதிரியான ஏதாவது ஒன்று இந்திய முதலாளி வர்க்கமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் சமரசம் செய்து கொள்வதில் முடிவடையும்.

அப்படிப்பட்ட ஒன்று, இந்திய மக்களுக்கு எந்தவிதத்திலும் பயன் தரப் போவதில்லை.

பெரு முதலாளிகள், வியாபாரிகளைக் கொண்டு இங்கிலாந்திற்கு சில அழுத் தங்களைக் கொடுத்து, ஒருசில அதிகாரங்களைப் பெற்றுத்தர காங்கிரஸ் நினைக்கிறது,

ஆனால் இலட்சோப இலட்சக்கணக்கான உழைக்கும் மக்கள், ஏழை விவசாயி களின் விடுதலையும் விமோசனமும் நிச்சயமாக இந்த வழியில் கிடையாது.

ஸ்தாபன ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட பாட்டாளிகள், விவசாயிகள், பரந்துபட்ட மக்கள் இவர்களுடைய ஒன்றுபட்ட பலத்தால் மட்டுமே இந்தநாடு வெற்றிகரமான ஒரு போராட்டத்தை நடத்தமுடியும்.

காங்கிரஸ் தலைவர்கள் இவர்களை ஒன்று திரட்டுவதற்கு ஏதும் செய்யவில்லை.

பரந்துபட்ட விவசாயிகள் அந்நிய ஆட்சியின் அடிமை நுகத்தடியிலிருந்து தங்களை விடுதலை செய்து கொள்வதோடு மட்டுமன்றி, இந்த நாட்டினுடைய நிலப்பிரபுக்கள், முதலாளிகள் இவர்களுடைய அடிமை நுகத்தடியிலிருந்தும் தங்களை விடுதலை செய்து கொள்ளவேண்டும்.

இது காங்கிரசின் இலட்சியமல்ல. அது ஒரு பரிபூரண விடுதலைப் புரட்சிக்காக இருக்கிறது என்று சொல்ல முடியாது.

அந்நிய அரசுக்கு பொருளாதார ரீதியில் சில அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம் இந்திய பணக்கார வர்க்கத்திற்கு மேலும் சில சலுகைகளைப் பெற வேண்டும்; காங்கிரஸ் விரும்புவது இவ்வளவே.

படிப்பகம்

www.padippakam.com



ஆகவே காங்கிரசானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் சமரசம் செய்து கொண்டு சரண் புகுவதில் தன்னை முடித்துக் கொள்ளும் அல்லது தோல்வியடையும் என்பது என் கருத்து,

ஆனால் இந்தியப் போராட்டமானது விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசில மனிதர்கள் சுயநலத்துக்காகப் பாமர மக்களைச் சுரண்டுவது நீடிக்கிற வரையில், நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

சுரண்டுபவர்கள் இந்தியனா, பிரிட்டிஷ்காரனா, அல்லது இருவரும் கூட்டு சேர்ந்த கொள்ளையா, எப்படியாயிருந்தாலும் அது இந்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது.

ஊமையாகிவிட்ட உழைக்கும் மக்களின் விடுதலையை எங்களைப் போன்று நேசிப்பவர்கள், பாராளுமன்றம் என்ற இந்த அவமானச் சின்னத்தை அமைதியோடு சகித்துக் கொண்டிருக்க முடியாது.

சுரண்டல்காரர்களின் பிரதான சுரண்டல்காரனாக இந்த ஆட்சி இருக்கிறது.

இந்தச் சுரண்டல் கொள்ளைக்காரர்களின் பொருளாதார நிர்மாணத்துக்காக, வாழ்வின் இரத்தத்தை அணி அணியாகக் கொடுக்கிற உழைக்கும் மக்களுக்காக எவருடைய இதயத்தில் இரத்தம் இருக்கிறதோ, அவரால் இதயத்திலிருந்து குமுறி எழுகின்ற உயிர் வதையின் குரலை அலட்சியப்படுத்தி அடக்கமுடியாது.

நாங்கள் மனித உயிர்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு, மிக உயர்வாக நேசிக்கிறோம்.

அநியாயமாக அடுத்தவர்களைத் துன்புறுத்துவதைவிட மனித சமுதாயத்தின் சேவைகளில் எங்கள் வாழ்வை அர்ப்பணிப்போம்.

கொலை செய்வதற்குக் கொஞ்சம்கூட வருத்தப்படாத கூலிக்காக படுகொலை புரியும் ஏகாதிபத்திய கூலிப் பட்டாளங்களைப் போலல்லாமல், முடிந்தவரை மனித உயிர்களைக் காப்பதற்கே நாங்கள் முயற்சிக்கிறோம்.

ஆனாலும் நாங்கள் பாராளுமன்றத்துல வெடிகுண்டுகளை வீசினோம் என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறோம்.

சபையின் உறுப்பினர்களைக் கொலை செய்வதற்காக நாங்கள் குண்டு வீசவில்லை.

ஆறு பேர்களுக்கும் குறைவானவர்களுக்கு இலேசான சிராய்ப்புக் காயங்களைத் தவிர, வேறு உயிரிழப்பு ஒன்றுமில்லை என்பதற்குத் திட்டமிட்டு அந்தக் குண்டை ஒருவருமில்லாத காலி இடத்தில் வீசி எறிந்ததுதான் காரணம் என்பதைத்தவிர வேறு விசித்திரம் ஒன்றுமில்லை.

கொலை செய்வதுதான் எங்களது நோக்கமாயிருந்ததால், ஜனாதிபதி காலரியில் அமர்ந்திருந்த, இந்திய மக்களின் ஒருமுகமான வெறுப்புக்குள்ளான சைமன் கமிஷன் தலைவர் ஜான் சைமன் மீது நிச்சயமாக வீசியிருக்க முடியும்.

ஆகவே கொலை செய்வது எங்கள் நோக்கமல்ல. மேலும் நாங்கள் வெடித்த குண்டும் சக்தி வாய்ந்ததல்ல திட்டமிட்டே அது அவ்வாறு செய்யப்பட்டது.

''இங்கிலாந்தை அதன் கனவுகளிலிருந்து எழுப்ப குண்டுகள் தேவை'' என்ற C. R. தாஸின் எழுத்தை நினைவு கூர்ந்து, தொடர்ந்து வேதனையை எடுத்துச் சொல்ல எங்கள் எதிர்ப்பைக் காட்ட குண்டுகளை வீசினோம்.

படிப்பகம்

www.padippakam.com



''செவிடர்களைக் கேட்க வைப்பது'' ''உரிய தருணத்தில் எச்சரிப்பது''
அதுவே எங்கள் நோக்கம்.

ஜெனரல் டயர் குண்டுமாரி பொழிந்து ஆயிரக்கணக்கான மக்களை ஜாலியன் வாலாபாக்கில் படுகொலை புரிந்தான்,

அவன் மீது வழக்கில்லை; விசாரணையில்லை!
மாறாக இந்த அரசு அவனுக்கு இலட்சக்கணக்கான ரூபாய்களைப் பரிசளித்து பாராட்டியிருக்கிறது;

ஆனால் எங்கள் நாட்டுத்தலைவரோ, கொலை, கொள்ளை, தீ வைப்பு, கற்பழித்தல் போன்ற கொடுமைகளுக்கு ஆளான மக்கள் கிளர்ந்தெழுந்து சவுரி சௌரா என்ற ஊர்ப் போலிஸ் நிலையத்தைச் சூறையாடியதில் கூட வெள்ளை நாய்கள் இறந்தது என்பதற்காக, பிரிட்டிஷ் ஆட்சியின் அஸ்திவாரமே ஆட்டங் காண ஆரம்பித்துவிட்டது என வைசிராயால் தந்தி அடிக்கப்படும் அளவுக்கு இருந்த ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார். கார்வாலி வீரர்கள் சுட மறுத்தபோது அது கிரிமினல் குற்றம் என்றார். பம்பாயில் கப்பற் படை வீரர்கள் யூனியன்ஜாக்கை இறக்கிவிட்டு செங்கொடியை ஏற்றியதை யடுத்து, வெள்ளை ஏகாதிபத்தியம் வீரர்களைப் படுகொலை புரிந்ததைக் கண்டித்து நாடே கிளர்ந்து எழுந்தபோது அதற்கு எதிராக அறிக்கை விடுத்தார்.

சக்தி குறைந்த ஒரு குண்டை தயாரித்து காலி இடத்தில் வீசியதற்காக எங்கள் மீது வழக்கு; விசாரணை எல்லாம்.

''கெட்ட எண்ணத்துடன்,'' என்று தீர்ப்பில் கூறியுள்ளதை எடுத்து விடுங்கள். நான் திருப்தி அடைவேன்:

எங்களுக்கென்று ஒரு இலட்சியம்; அதை அடைய சில முறைகளைக் கையாளு கிறோம் அவ்வளவே.

தலையெடுக்கும் இளம் சந்ததியினரால் சந்தேகத்தின் சாயல் என்பது துளியும் இன்றி, வாழ்வில் நிதர்சனமாக உணரப்பட்டுள்ளன. கற்பனாவாத அஹிம்சைவாத மலட்டுக் கொள்கையின் முடிவையே நாங்கள் குறிக்கிறோம். பலாத்காரத்தை அக்கிரமமாகவும் ஆக்கிரமிப்பு செயலுக்குப் பயன்படுத்தும்போது அங்கு அது வன்முறை.

ஆகவே அது அநீதியானது; தார்மீக அடிப்படை அற்றது.

ஆனால் சரியான ஒரு இலட்சியத்தை அடைவதற்காக பலாத்காரம் பயன்படுத்தப் படும்போது, அது வன்முறையல்ல.

எனவே அது நீதியானது; தார்மீக அடிப்படை உடையது.

பலாத்காரத்தை எந்த நிலையிலும் தவிர்க்க முடியும் என்பது மிக மோசமான கற்பனையே.

நாட்டில் தோன்றியிருக்கும் இப்புதிய இயக்கத்தின் எச்சரிக்கை நாங்கள்.

குரு கோவிந்தசிங், வீரசிவாஜி, கமால்பாஷா, லெனின் இவர்களுக்கெல்லாம் எந்த இலட்சியம் எழுச்சியூட்டியதோ, அதே இலட்சியத்தாலே எழுச்சியூட்டப்பட்டது இந்தஇயக்கம்.

பாட்டாளியே சமுதாயத்தின் உயிர் நாடி. அனைத்து மக்களின் சுபிட்சம் என்பது பாட்டாளி மக்களின் இறுதியான விடுதலையால் மட்டுமே சாதிக்க முடியும்.

இந்த இலட்சியங்களுக்காக, இந்த நம்பிக்கைக்காக விதிக்கப்படும் எந்தக் கொடுமை யான துன்பங்களையும் வரவேற்கிறோம்.

புரட்சி என்னும் புனித மேடையிலே கொளுத்தப்படும் கற்பூரமாக எங்கள் இளமையை அர்ப்பணிக்கிறோம்; எங்கள் இளம் இரத்தத்தின் நறுமணம் அங்கே வீசட்டும்.

படிப்பகம்

www.padippakam.com



உன்னதமான இந்த புரட்சி இலட்சியத்திற்கு எந்தத் தியாகமும் பெரிதல்ல.

மக்களால் மக்களுக்காக என்பதுதான் புரட்சி. வேறு வார்த்தைகளால் விளக்கமாகச் சொல்லப்போனால் சுயராஜ்யம் என்பது நாட்டின் 98 சத மக்களுக்கே.

சுயராஜ்யம் என்பது மக்களால் அடைவது என்பது மட்டுமல்ல; மக்களுக்காக அடைவது என்பது ஆகும்.

புரட்சி என்பது எனக்கு அநீதியின் அடித்தளத்தின் மேல் அமைக்கப்பட்டுள்ள இந்த சமுதாய அமைப்பையே அடியோடு மாற்றுவதுதான்.

அநீதி எங்கே என்று கேட்கிறீர்களா?

இதோ! சமுதாயத்தின் அச்சாணியாகப் பாட்டாளிகள் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் உழைப்பின் பலனைப் பெற முடியாமல் சுரண்டல்காரர்களால் கொள்ளையடிக்கப் படுகிறார்கள். மிகச்சாதாரணமான உரிமைகள்கூட அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன.

ஒரு பக்கத்திலே உழுது பயிரிட்டு அனைவருக்கும் உணவு விளைவிக்கும் உழவன் தன் குடும்பத்தோடு பட்டினி கிடக்கிறான்.

உலக மார்க்கெட்டுக்கு பருத்தித் துணிகளை நெய்து வழங்கும் நெசவாளி தன் உடலையும், தன் குழந்தையின் உடலையும் மறைப்பதற்கு போதிய துணி இல்லாமல் இருக்கிறான்.

மாட மாளிகைகள், கூடகோபுரங்கள், அரண்மனைகள் இவைகளைக் கட்டி எழுப்புகிற கொத்தர்கள், கொல்லர்கள், தச்சர்கள், குடிசைகளிலும் குப்பைமேடுகளிலும் குமைந்து சாகிறார்கள்.

மறுபக்கத்திலே முதலாளிகள் சுரண்டல் கொள்ளைக்காரர்கள், உழைக்காமல் உண்ணும் சமுதாய ஒட்டுண்ணிகள், தங்கள் மனம்போன போக்கில் பலலட்சங்களை செல வழிக்கிறார்கள்.

மாற்றம் வேண்டுவோரது கடமை, சோஷலிஸ அடிப்படையில் சமுதாயத்தை புனர் நிர்மாணம் செய்வதே.

இதைச் செய்தாலொழிய மனிதனை மனிதன் சுரண்டுவது, ஒரு நாடு மற்றொரு நாட்டைச் சுரண்டுவதான ஏகாதிபத்தியம் இவற்றை அடியோடு ஒழிக்காத வரையில் மனித சமுதாயத்தைப் பயமுறுத்துகிற துன்பங்கள் இரத்தப் படுகொலை இவற்றைத் தவிர்க்க முடியாது.

அதுவரையில், யுத்தங்கள் ஒழிப்பு பற்றிய பேச்சும், உலக அமைதி பற்றிய கூச்சலும் திரைபோட்டு மூடி மறைக்கப்படாத பித்தலாட்டங்களே!

அம்மாதிரியான விபத்துக்கள் மனித குலத்தைப் பயமுறுத்தாத பாட்டாளி வர்க்கத் தலைமை உறுதியாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் விளைவாக, மனித குலம் முழுவதையும் முதலாளியத்தில் அடிமைத் தளையிலிருந்தும். துன்பங்களிலிருந்தும், யுத்த அபாயங்களிலிருந்தும் விடுதலை செய்த ஒரு உலகக் கூட்டாட்சிக்கு அடிகோலுகிற, ஒரு சமூக அமைப்பை ஏற்படுத்துவதையே தான் புரட்சி என்று சொல்கிறேன்.

புரட்சி முதலாளித்துவத்திற்கும் வர்க்க வேறுபாடுகளுக்கும் சாவு மணியடிக்கும்.

வெளிநாட்டு உள்நாட்டு கொள்ளை என்ற இரண்டு அடிமை நுகத்தடியிலும் அழுந்தி, ஒட்டிய வயிறும் உலர்ந்த தோலுமாக தவித்துக் கொண்டிருக்கும் கோடானு கோடி மக்களுக்கு வாழ்வில் குதூகலத்தையும், சுபிட்சத்தையும் கொண்டுவந்து சேர்க்கும்.

படிப்பகம்

www.padippakam.com



அது இந்த நாட்டை, அதற்கு உரியவர்களிடம் கொண்டு வரும்.

அது ஒரு புதிய அரசு—ஒரு புதிய சமுதாயத்தைப் பிரசவிக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவும். சமூக ஒட்டுண்ணிகளை அரசு கட்டிலிலிருந்து நிரந்தரமாக அழித்துவிடும்.

நானும் தத்தும் எங்களுக்கு அளிக்கும் தண்டனைகளை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்கிறோம்.

மனிதர்களை ஒழிப்பதன் மூலம் அவர்களுடைய எண்ணங்களை அழிக்க முடியாது என்பதை ஏகாதிபத்தியவாதிகள் உணரட்டும்.

இயக்கத்தின் இரண்டொரு பிரிவுகளை அழிப்பதன் மூலம் இயக்கத்தையே அழித்து விட முடியாது.

மிகக் காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளையும், சித்திரவதைகளையும் புன்முறுவலோடு இளைஞர்கள் ஏற்றுக்கொள்ள முடியும்.

தயக்கம் என்பது சிறிதுமின்றி மரணத்தை வலிந்து அணைத்துக்கொள்ள முடியும்.

ஏனென்றால் மனித சமுதாய முன்னேற்றத்தின் சரித்திரம் எண்ணற்ற யுவர்கள், யுவதிகளின் இளம் இரத்தத்தால்தான் எழுதப்பட்டுள்ளது.

ஓ இளைஞர்களே! இளந்துருக்கியரின் அற்புதங்களை நீங்கள் படித்ததில்லையா?

சீனத்தின் சிவப்பு இளைஞர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நீ தினமும் படிப்பதில்லையா?

ருஷ்ய விடுதலைக்காக அந்நாட்டு இளைஞர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்ய முன்வரவில்லையா?

சோஷலிஸ துண்டுப் பிரசுரங்களை விநியோகித்ததற்காகவும், சோஷலிஸ சிந்தனை மன்றத்தில் உறுப்பினராய் இருந்ததற்காக கடந்த நூற்றாண்டில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் சைபீரியாவிற்கு அனுப்பப்படவில்லையா?

மீண்டும் மீண்டும் புயலென எழுந்து அடக்குமுறையை அவர்கள் சந்திக்க வில்லையா?

அவர்கள் உறுதி இழந்தார்களா? பாஸ்டில் சிறைகளால் பிரெஞ்சுப் புரட்சியை நசுக்க முடிந்ததா?

தூக்குமேடைகளாலும் சைபீரியாவாலும் ருஷ்யப் புரட்சியை ஒழிக்க முடிந்ததா?

அவசரச் சட்டங்களும், பாதுகாப்பு மசோதாக்களும் இந்திய விடுதலைத் தீயை அணைக்க முடியுமா?

பொய்யான சதி வழக்குகள். புரட்சிகர இளைஞர்களைச் சிறையிலடைத்தல் இவை எதுவுமே புரட்சியின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியுமா?

விளக்கமாக விரிவாகச் சொல்ல விரும்பாமல் திட்ட வட்டமாக இவ்வாறு கூறுகிறேன்.

நம் இலட்சியத்தை அடைய, அறிவாற்றல்மிக்க இளைஞர்கள், ரஷ்ய இளைஞர்களைப் போன்று தங்கள் வாழ்வை கிராமப்புறங்களில் செலவிட வேண்டும்.

இந்தியப் புரட்சி என்பது என்ன என்பதை அவர்கள் உணரும்படி செய்ய வேண்டும்.

புரட்சி என்பது உலகின் நியதி; மனித சமுதாய முன்னேற்றத்தின் ரகசியம்.

www.padippakam.com



மக்களுக்காக மக்களால் புரட்சி என்பதை தொழிலாளர்கள் விவசாயிகள் ஒரே அணியில் திரட்டப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் மூலம் மட்டுமே முடியும்.

புரட்சிவாதி என்று நான் சொல்வது கையில் வெடிகுண்டுகளுடனும் துப்பாக்கிகளுடனும் அலையும் மனிதன் என்று அர்த்தமாகாது.

பயங்கர நடவடிக்கைகள் என்பது புரட்சியின் போக்கில் தவிர்க்க முடியாத அவசியமான ஒரு கட்டம்.

பயங்கர நடவடிக்கைகள் என்பதே ஒரு முழுமையான புரட்சி ஆகிவிடாது: ஒரு புரட்சியின் பணிகளை அது சாதித்து விடாது.

ஆனால் எந்தப் புரட்சியும் பயங்கர நடவடிக்கைகள் இன்றி முழுமை பெறுவதில்லை என்பது ஒவ்வொரு புரட்சியின் வரலாறும் போதிக்கும் பாடமாகும்.

பயங்கர நடவடிக்கையின் பலன் இதுதான்.

யாராலும் தங்களை அசைக்க முடியாது என்று அரசுகள் ஏற்படுத்தி வைத்திருக்கிற ஒரு மலைப்பை ஒரு பிரமிப்பை மனத்தோற்றத்தை, அது சுக்குநூறாக உடைத்து சின்ன பின்னமாக்கும்.

விடுதலை தாகம் கொண்டு மக்கள் இதய முழக்கத்தை உலகின் முன் ஓங்கி ஒலிக்கச் செய்கிறது.

மேலும் புரட்சி மக்களின் விடுதலைப் பசியை அடித்துக் கூறுவதற்கு ஒரு சரியான வழியல்லவோ?

பயங்கர நடவடிக்கைகள் புரட்சியாக வளரும்—புரட்சி சுதந்திரமான அரசியல் பொருளாதார சமூக சுதந்திரமாக மலரும்.

வெறும் துப்பாக்கிகளாலும் வெடிகுண்டுகளாலும் மட்டுமே யாரும் பயனடைய முடியாது என்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. இந்துஸ்தான் சோஷலிஸக் குடியரசின் ராணுவ வரலாறு அதை தெளிவாகக் காட்டுகிறது.

சில நேரத்தில் சில நிலைமைகளில் குண்டுகளை வீசுவது அனுமதிக்கப்படக்கூடியது என்றாலும்கூட வெறும் குண்டுகளை மட்டும் வீசுவது என்பது முட்டாள்தனமானது மட்டுமல்ல; அநேக தடவைகளில் அது தீங்கு பயக்கக் கூடியதுமாகும்.

நம்முடைய முக்கியப் பணி தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஸ்தாபன ரீதியில் ஒன்றுதிரட்டுவது என்பதே ஆகும்.

பரந்து பட்ட மக்களின் நலன்களைப் பாதுகாத்தல், நமது இலட்சியக் கனவுகளை நனவாக்குதல், மார்க்ஸிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்திற்கு அடிகோலுதல் ஆகிய இப்பணிகள் அரசு அதிகாரத்தை உடனே கொடுக்குமாறு நம்மைக் கோருகின்றன.

வெகு சீக்கிரமே ஒரு முடிவான யுத்தம் துவங்கும். அதனுடைய முடிவு அனைத்தையும் நிச்சயிக்கக்கூடிய வகையிலே இருக்கும். ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் இவற்றின் இறுதி நாட்கள் எண்ணப்படுகின்றன.

நாங்கள் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டோம். அவ்வாறு செய்ததற்காக நாங்கள் பெருமை அடைகிறோம்.

மூலம் : கோபால் தாக்கூர் (பகத்சிங் பற்றிய நூல்)

நன்றி : 'மனிதன்' 1973 - அக்டோபர் இதழ்

படிப்பகம்

www.padippakam.com



# "மலைகளை அகற்றிய மூடக்கிழவன்"

[இது, சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது தேசிய பேரவையில் தோழர் மா-சே-துங் நிகழ்த்திய முடிவுரையாகும்]

ஜூன் 11, 1945

நமது கட்சிப்பேரவையை மிக வெற்றிகரமாக நடத்தியுள்ளோம். மூன்று செயல்களை நாம் செய்து முடித்துள்ளோம். முதலாவதாக, கட்சி செயல்படவேண்டிய பாதையைப்பற்றி ஓர் முடிவுக்கு வந்துள்ளோம். மக்களைத் துணிச்சலுடன் ஒன்று திரட்டுவதும், மக்கள் சக்திகளைப் பெருக்குவதும்தான் அப்பாதை, அப்போதுதான், கட்சித் தலைமையின்கீழ் அவர்கள் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களைத் தோற்கடிப்பார்கள், மக்களனைவரையும் விடுவிப்பார்கள். ஒரு புதிய சீனாவை உருவாக்குவார்கள். இரண்டாவதாக, கட்சியின் புதிய ஸ்தாபன சட்டத்தை அங்கீகரித்திருக்கிறோம். மூன்றாவதாக கட்சியை வழி நடத்திச் செல்கின்ற மத்திய கமிட்டியைத் தேர்ந்தெடுத்துள்ளோம். கட்சிப் பாதையினைஅமுல்படுத்த உறுப்பினர் அனைவரையும் நடத்திச் செல்வதுதான் இனிமேல் நமது பணியாகும். நமது பேரவை ஒற்றுமைக்கும் வெற்றிக்கும் உதாரணமாகத் திகழ்ந்திருக்கிறது. அதில் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று அறிக்கைகள் மீதும் பிரதிநிதிகள் அருமையான விமர்சனத்தைத் தந்துள்ளனர். அநேக தோழர்கள் சுய விமர்சனத்தைக் கையாண்டுள்ளனர். கட்சியின் ஒற்றுமையை இலட்சியமாக நிறுத்தி, அந்த ஒற்றுமையை சுய விமர்சனத்தின் மூலம் அடைந்திருக்கிறார்கள். இப்பேரவை ஒற்றுமையின் ஒரு முன்னுதாரணம்; உட்கட்சி ஜனநாயகத்தின் முன்னுதாரணம்.

இப்பேரவை முடிந்ததும் அநேக தோழர்கள் தத்தம் பணிகளுக்கும் பல்வேறு போர் முனைகளுக்கும் செல்வார்கள். தோழர்களே எங்கெல்லாம் நீங்கள் செல்கிறீர்களோ அங்கெல்லாம் இப்பேரவை காட்டும் பாதையினைப் பற்றிப் பிரச்சாரம் செய்யவேண்டும். கட்சி உறுப்பினர்களைக் கொண்டு, பரந்துபட்ட மக்களுக்கு அதனைத் தெளிவாக்க வேண்டும்.



எந்த நோக்கத்தில் நாம் இப்பேரவையின் பாதையைப் பிரச்சாரம் செய்கிறோம்? புரட்சியில் நாம் நிச்சயமாக அடையப்போகின்ற வெற்றியைப் பற்றிய நம்பிக்கையைக் கட்சி முழுவதற்கும், மக்களனைவருக்கும் ஊட்டி வளர்க்கத்தான் அதனைச் செய்கிறோம். முதலில் நாம் முன்னணிப் படையினரின் அரசியல் உணர்வை உயர்த்த வேண்டும். அப்போதுதான் அவர்கள் உறுதியுடனும் அஞ்சா நெஞ்சுரத்துடனும் தியாகம் செய்து துன்பங்கள் ஒவ்வொன்றையும் கடந்துசென்று வெற்றி பெறுவார்கள். ஆனால் இதைமட்டும் செய்தால் போதாது. மக்களனைவரின் அரசியல் உணர்வையும்கூட நாம் கிளர்ந்தெழச் செய்யவேண்டும். அப்போதுதான் அவர்கள் விருப்பத்தோடும் மனமகிழ்ச்சியோடும் நம்மோடு ஒன்றுசேர்ந்து வெற்றிக்காகப் போராடுவார்கள். சீன நாடு சீன மக்களுக்குத்தானேயன்றி, பிற்போக்குவாதிகளுக்கல்ல என்ற உறுதியான நம்பிக்கை மக்கள் அனைவரிடத்திலும் சுடர்விட்டு எரியும்படி செய்யவேண்டும். 'மலைகளை அகற்றிய மூடக்கிழவன்'

படிப்பகம்

www.padippakam.com



என்ற சீனப் பழங்காலக் கட்டுக்கதையொன்று உண்டு. நீண்ட நெடுங்காலத்துக்கு முன்பு வட சீனத்தில் வாழ்ந்து வந்த ஒரு கிழவனைப் பற்றிய கதை அது. வடக்கு மலையின் மூடக்கிழவன் என்று அவன் அழைக்கப்பட்டான். அவன் வீடு தென் திசையை நோக்கி இருந்தது, தாய்ஹாங், வாங்கு என்ற இரண்டு மலைச் சிகரங்கள் அவன் வாசலுக்கு அப்பால் வழியை மறைத்து நின்றன. தளராத உறுதியுடன், மலைகளைத் தோண்டி அகற்றிவிட வேண்டும் என்ற நோக்கத்துடன் மண்வெட்டியைக் கையில் எடுத்துத் தன் மக்களுடன் வேலையைத் துவங்கிவிட்டான். புத்திசாலிக் கிழவன் என்றழைக்கப்பட்ட ஒரு நரைத்தாடி கிழவன் இதைக் கண்டான். அவன் அவர்களைப் பார்த்து, 'நீங்கள் செய்வது இது என்ன முட்டாள்தனம்! நீங்கள் சிலர் சேர்ந்து பிரம்மாண்டமான இம் மலைகளை தோண்டி எடுப்பது என்பது நடக்காத செயல்' என்று ஏளனம் தொனிக்கக் கூறினான். அதற்கு மூடக்கிழவன் கூறியதாவது: 'நான் இறந்த பிறகு என் பிள்ளைகள் தோண்டுவார்கள். அவர்கள் இறந்த பிறகு எனது பேரப்பிள்ளைகள் தோண்டுவார்கள். பிறகு அவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இப்படியாக முடிவில்லாது தோண்டிக் கொண்டிருப்போம். மலைகள் உயரமாகத்தான் இருக்கின்றன; ஆனால் இதற்குமேல் அவை வளரமுடியாது. நாங்கள் கொஞ்சம்கொஞ்சமாகத் தோண்டத் தோண்ட அந்த அளவுக்கு அதன் உயரமும் குறைந்து கொண்டுதான் வரும். எனவே அவற்றை ஏன் எங்களால் அகற்ற முடியாது?' புத்திசாலிக் கிழவன் சொன்ன தவறான கருத்தை மறுத்துவிட்டு நம்பிக்கை தளராமல் அவன் நாள் தவறாது தோண்டிக்கொண்டேயிருந்தான். இதைப் பார்த்த கடவுளின் மனம் நெகிழ்ந்தது. இரண்டு தேவ தூதர்களை கீழே அனுப்பி அம்மலைகளைத் தம் தோளில் சுமத்தி அப்புறப்படுத்தச் செய்தார். இன்று இருபெரும் மலைகள் சீன மக்களின்மேல் தாங்க முடியாத சுமையாக இருக்கின்றன. ஒன்று ஏகாதிபத்தியம். மற்றொன்று நிலப் பிரபுத்துவம். இவ்விரு பெரும் மலைகளையும் அடியோடு பெயர்த்து எறிவதற்கு சீன கம்யூனிஸ்டு கட்சி நெடுநாட்களுக்கு முன்பே தீர்மானித்துவிட்டது, நாம் அயராது உழைத்து, விடாது பாடுபட்டாக வேண்டும். அப்படிச் செய்தால் நாமும் கடவுளின் நெஞ்சைத் தொடமுடியும். நமது கடவுள் வேறு யாருமல்ல—பரந்துபட்ட சீன மக்கள்தான். அவர்களும் நம்மோடு சேர்ந்து நின்று அம்மலைகளைத் தோண்டத் துவங்கிவிட்டால் ஏன் அவற்றைத் தூக்கி எறிய முடியாது?

நேற்றைய தினம் அமெரிக்காவுக்குப் புறப்பட இருந்த இரு அமெரிக்கர்கள் என்னைச் சந்தித்துப் பேசினர். 'அமெரிக்க அரசாங்கம் எங்களைக் கவிழ்ப்பதற்கு சதி செய்துகொண்டிருக்கிறது. இதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்' என்று நான் கூறினேன். கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக சியாங் கேய்—ஷேக்கை ஆதரிக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையை நாம் எதிர்க்கிறோம். ஆனால் நாம் ஒரு வரையறுப்பு செய்து கொள்ளவேண்டும். முதலாவதாக, அமெரிக்க மக்களுக்கும் அமெரிக்க அரசாங்கத்திற்கும் இடையிலான ஒரு வரையறுப்பு செய்து கொள்ளவேண்டும். இரண்டாவதாக, அமெரிக்க அரசாங்கத்தினுள் கொள்கை வகுப்போருக்கும் அவர்களது ஊழியர்களுக்கும் இடையிலான ஒரு வரையறுப்பு செய்து கொள்ளவேண்டும். அந்த இரு அமெரிக்கர்களிடமும் நான் சொன்னேன். 'விடுதலை செய்யப் பட்ட பிரதேசங்களுக்குள் நாங்கள் அமெரிக்கர்களை நுழைய அனுமதிக்க மாட்டோம் என்று உங்கள் அரசாங்கத்தின் கொள்கை வகுப்போரிடம் சொல்லுங்கள். ஏனெனில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக அவர்கள் சியாங் கேய்—ஷேக்கை ஆதரிக்கின்றனர், நாங்கள் விழிப்புடன் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. ஜப்பானை எதிர்த்துப் போரிடுவதுதான் உங்கள் நோக்கம் என்றால், விடுதலை செய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் நீங்கள் வரலாம். ஆனால் முதலில் இதுபற்றி ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். எல்லா இடங்களிலும் மோப்பம் பிடித்துத் திரிய உங்களை அனுமதிக்கமாட்டோம். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒத்துழைப்பதில்லை என்று பாட்ரிக் ஹார்லி வெளிப்படையாகவே அறிவித்த பின்னரும், விடுதலை செய்யப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com




எங்கள் பிரதேசங்களுக்குள் வந்து இரை தேடி அலைய ஏன் ஆசைப்படுகிறீர்கள்?'

கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக சியாங்கேய்-ஷேக்கை ஆதரிக்கும் அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையானது அமெரிக்கப் பிற்போக்காளரின் விம்புத்தனத்தைத்தான் காட்டுகிறது; பிற்போக்காளர்கள் சீனர்களாயிருந்தாலும் சரி, வெளிநாட்டவராயிருந்தாலும் சரி, சீனமக்கள் வெற்றி பெறுவதைத் தடுக்கும் பொருட்டு, இடுகின்ற திட்டங்கள் யாவுமே தகர்ந்து தோல்வியடைந்தே தீரவேண்டும் என்பது விதி. இன்றைய உலகில் ஜனநாயக சக்திகள் தாம் முதன்மையான நீரோட்டம்; பிற்போக்குச் சக்திகள் ஒரு வெறும் எதிரொழுக்கு மட்டுமே, தேச விடுதலையும் மக்கள் ஜனநாயகமுமாகிய முதன்மையான நீரோட்டத்தை, பிற்போக்கு எதிரொழுக்கு அமிழ்த்திச் செல்ல முயற்சிக்கிறது, ஆனால் எக்காலத்திலும் அது முதன்மையான நீரோட்டமாக மாறமுடியாது. நீண்ட நாட்களுக்கு முன்பே தோழர் ஸ்டாலின் சுட்டிக்காட்டியதுபோல பழைய உலகத்தின் மூன்று மூப்படைந்த முரண்பாடுகள் இன்னும் நிலவுகின்றன; முதலாவது, ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளிவர்க்கத்துக்கும் முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயுள்ள முரண்பாடு; இரண்டாவது பல்வேறு ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையேயுள்ள முரண்பாடு; மூன்றாவது, காலனி, அரைக்காலனி நாடுகளுக்கும் அவற்றை உடைமையாக கொண்ட ஏகாதிபத்தியத் தலைமை நாடுகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு. இந்த மூன்று முரண்பாடுகளும் தொடர்ந்து இருந்து வருவது மட்டுமல்லாமல் மென்மேலும் கூர்மையடைந்தும் வியாபித்துக் கொண்டும் இருக்கின்றன. இன்னும் நிலவிக்கொண்டிருக்கிற, சோவியத் விரோத, கம்யூனிஸ்ட் விரோத, ஜனநாயக விரோத எதிரொழுக்கு அடித்துச் செல்லப் படக்கூடிய காலமானது, இம் முரண்பாடுகள் நிலவிக்கொண்டிருப்பதாலும், வளர்ந்து கொண்டிருப்பதாலும் வந்தே தீரும்.

இந்த நேரத்தில் சீனாவில் இரு பேரவைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஒன்று. கோமிண்டாங்கின் ஆறாவது தேசியப்பேரவை மற்றொன்று கம்யூனிஸ்ட் கட்சியின் ஏழாவது தேசியப் பேரவை. இவை ஒன்றுக்கொன்று முற்றிலும் வேறுபட்ட நோக்கங்களைக் கொண்டவையாகும். ஒன்றின் நோக்கம் சீனாவிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியையும் எல்லா ஜனநாயக சக்திகளையும் ஒழித்துக் கட்டிவிட்டு சீனாவை இருட்டில் மூழ்கடிப்பதாகும். மற்றொன்றின் நோக்கம், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும், சீனாவின் நிலப்பிரபுத்துவ சக்திகளையும் தூக்கியெறிந்துவிட்டு, புதிய ஜனநாயக சீனாவை நிர்மாணித்து சீனாவை வெளிச்சத்தினுள் கொண்டு செல்வதாகும்; இவ்விரு போக்குகளும் எதிரும் புதிருமானவையாகும். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்பட்டு ஏழாவது பேரவையின் நெறியால் வழிகாட்டப்பட்டு, சீன மக்கள் முழுமையான வெற்றியை அடைந்தே தீருவர் என்பதிலும், கோமிண்டாங்கின் எதிர்ப்புரட்சி நெறியின் தோல்வி தவிர்க்க முடியாது என்பதிலும் நமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு.

## கடினமாகப் போராடும் ஒரு பாரம்பரிய நடை



கடினமாகப் போராடும் ஒரு பாரம்பரிய நடை நமது நாட்டிற்கு எப்பொழுதும் உண்டு, இந்த நடையை நாம் வளர்க்க வேண்டும். இன்னும், கம்யூனிஸ்டு கட்சி ஓர் உறுதியான, சரியான அரசியல் திசை வழிக்காக எப்பொழுதும் வாதாடி வந்திருக்கிறது. இந்த திசைவழி கடினமான போராட்ட நடையிலிருந்து பிரிக்கமுடியாத ஒன்று. ஓர் உறுதியான, சரியான அரசியல் திசைவழி இல்லாவிட்டால் கடினமான வேலை நடையைக் கொண்டுவருவது சாத்தியமாகாது; சரியான அரசியல் திசை வழியை நிலைநிறுத்துவதும் சாத்தியமாகாது.

—தோழர். மாவோ

படிப்பகம்

www.padippakam.com



# திரிபுவாதத்திற்கு எதிரான போராட்டமும் நவகாலனியத்தின் மார்க்சியப் பாடங்களும்

(மலையாளக் கட்டுரை எம். எம். சோமசேகரன்—தமிழில் டி. கே. ரமேஷ்)

காட் தொடர்பான புதிய விவாதங்களும், அண்மையில் இந்திய பொருளாதார அமைப்பில் உருவாகிக்கொண்டிருக்கும் மாற்றங்களும், ஏகாதிபத்தியம் தொடர்பான புதிய (இடதுசாரி) தேடுதல்களுக்கு வேகத்தை அதிகப்படுத்தியுள்ளன. ஏகாதிபத்தியத்திற்கு பணிந்துபோகும் தன்மையை உச்சகட்ட அளவில் மேற்கொண்ட பி.ஜெ.பி. போன்ற கட்சிகள் மேலோட்டமாகவாவது காட் ஒப்பந்தத்தை எதிர்ப்பதற்கு முன் வந்த சந்தர்ப்பத்தில்தான் மேற்கூறிய நிலை உருவாகியிருக்



கிறது. இந்த விவாதங்களில் ஐ.எம்.எஃப், உலக வங்கி ஆகியவைகூட உட்படுகின்றன. 'ஏகாதிபத்தியம்' என்ற பொதுவான வார்த்தை மட்டுமல்லாமல் நவகாலனியம், அரைக்காலனி, வல்லரசு ஆதிக்கம் ஆகிய பல்வேறு வார்த்தைகளும் இத்துடன் தொடர்புடையனவாகும். ஏகாதிபத்தியத்தைப்பற்றி எல்லோரும் ஒப்புக்கொள்ளக்கூடிய புரிதல்கள் இருப்பதைப்போலப் பயன்படுத்தும் போது, 'நவகாலனியம்' என்கிற வார்த்தையைப் பிரயோகிப்பதன் மூலம் இடதுசாரிகளுக்கிடையே ஒன்றுக்கு ஒன்று முரணான நிலைபாடுகளை மறைத்து வைப்பதற்கான வசதி உருவாகிறது. இது ஒரு வார்த்தையைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய எளிதான வித்தியாசம் கிடையாது என்றும், மார்க்சிசத்திற்கும் திரிபுவாதத்திற்கும் இடையிலான அடிப்படை வித்தியாசத்தை குறிக்கின்ற இரண்டு வகையான சிந்தனைப் போக்குகளின் வேறுபாடுதான் என்பதைத் தெளிவுபடுத்துவதுதான் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஏகாதிபத்தியம் தொடர்பான நவ இடதுசாரிகளின் பார்வை

ஏகாதிபத்யத்தைப் பற்றிய ஆய்வுகளில் லக்சம்பர்க் (Lexemburg School) அணியுடன் தொடர்புடையது என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற நவ இடதுசாரிகள் ஒரு முக்கியமான பிரிவாகும். ஏகாதிபத்தியத்திற்கும் காலனிகளுக்கும் இடையிலான மைய-சார்பு கோளம் போன்ற உறவுகள் மற்றும் அமைப்பின் ஆய்வுகளாகத்தான் இவர்கள் ஏகாதிபத்தியத்தையும் நவகாலனியத்தையும் பார்க்கின்றனர். சீன நிலைபாடுகளிலிருந்து வளர்த்தெடுக்கப்பட்டது என்று உரிமை கொண்டாடுகிற 'ஒரே ஏகாதிபத்தியத்தின் கீழிருக்கும் பொம்மை அரசுதான் நவ காலனியம்' என்கிற நிலைபாட்டிலிருந்து, அரிகி போன்றவர்களின் மைய-சார்புகோள் வணிக உறவாய்வுகள் வரையிலான அனைத்துமே மேற்குறிப்பிட்ட பிரிவில் அடங்குகின்றன. இவை அனைத்துமே ஏகாதிபத்தியத்தை முதலாளித்துவத்தின் பண்பு ரீதியாக வளர்ந்த கட்டமாகப் பார்க்கக்கூடிய லெனினியப் பாதனைகளை மறுக்கின்றன. ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான வித்தியாசத்தையும் நிதி மூலதன பிரபுத்துவ வளர்ச்சியைப் புரிந்துகொள்வதன் முக்கியத்துவத்தையும், உற்பத்தி உறவுகள் தொடர்பான ஆய்வுகளில் ஊன்றிக்கொள்வதின் முக்கியத்துவத்தையும் இவை நிராகரிக்

www.padippakam.com



கின்றன: ஏகாதிபத்தியத்தைப் பற்றிய மார்க்சிய - லெனினியக் கோட்பாட்டிற்கு மாறாகத்தான் இவற்றின் பார்வை இருக்கிறது. மட்டுமின்றி வியாபார முதலாளித்துவ காலகட்டத்திலான காலனிகளை வேறுபடுத்தி பார்ப்பதின் முக்கியத்துவத்தை இவை நிராகரிக்கின்றன. ஏகாதிபத்தியத்தைப் பற்றிய முதலாளித்துவ கட்டுமான வாதச் சிந்தனை அணியில் இருக்கும் இந்த சிந்தனையாளர்கள் நவகாலனியத்தையும் அதன் செயல்பாட்டு முறைகளையும் புரிந்துகொள்வதில் தோல்வி அடைவதில் வியப்பிலலை.

முதலாளித்துவ நாடுகளுக்கும் காலனிகளுக்கும் இடையிலான உறவு என்பது ஏகாதிபத்தியத்தைப் பற்றிய ஆய்வுகளில் முக்கியமானதாகும். மட்டுமின்றி, முதலாளித்துவம் அதன் உதய காலத்திலிருந்தே ஒருபுறம் அதன் சர்வதேசத் தன்மையைத் தென்படுத்தியுள்ளது. ஆனால் சுதந்திரப் போட்டியின் காலம் என்றழைக்கப்படும் முதலாளித்துவத்தின் துவக்கக் காலத்திலிருந்து, முதலாளித்துவத்தின் உள் முரண்பாடுகளின் இயக்கப் போக்குகளினால், நேர் எதிர்த்திசையை நோக்கிய ஏகபோகங்களின் கட்டத்திற்கு தாண்டிச் செல்வதின் வளர்ச்சிப் போக்கைப் பற்றி ஊன்றி நின்றுகொண்டுதான், மார்க்சிய லெனினியவாதிகள் ஏகாதிபத்திய காலனி உறவுகளைப் பார்த்துள்ளனர். முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்குள்ளே மூலதனத்தைப் பற்றிய மார்க்சிய ஆய்வின் தொடர்ச்சியாகத்தான், ஏகாதிபத்தியம், நவ காலனியம் தொடர்பான ஆய்வுகளையும் மார்க்சியவாதிகள் பார்க்கின்றனர்.

மேற்கூறப்பட்ட நவ இடதுசாரி கண்ணோட்டம் ஒரு சில மார்க்சிய-லெனினியக் குழுக்களுக்குள் தெரிந்தோ தெரியாமலோ செல்வாக்குச் செலுத்தியுள்ளதை நாம்பார்க்க முடியும் ஏகாதிபத்தியத்தைப்பற்றிய அதிகார பூர்வமான அல்லது ஒட்டுமொத்த அம்சங்களையும் தழுவிய ஏதாவதொரு ஆய்வடிப்படைக்கு மாறாக மார்க்சிய-ஆய்வின்மையால் உருவாகியுள்ள சூன்யத் தன்மையைப் பயன்படுத்திக்கொண்டு தான் மேற்கூறப்பட்ட நவ இடதுசாரி நிலைபாடுகள் செல்வாக்குச்செலுத்துகின்றன. இந்தக் குழுக்களின் வலதுசாரிப் போக்கை வலுப்படுத்துவதில் மேற்கூறிய செல்வாக்கு ஒரு முக்கியமான அம்சமாகும். ஆனால் திரிபுவாத சித்தாந்தங்களின் துல்லியமான அடிதளத்தின்மேல் வார்த்தெடுக்கப்பட்ட 'நவகாலனிய' சித்தாந்தங்கள் தான் இன்று இந்தியாவில் ஏகாதிபத்தியத்தைப்பற்றிய ஆய்வுகளை ஆண்டு வருகின்றன. ஆக இந்தக் கட்டுரையில் அதுதான் முக்கிய விஷயம்.

## மாபெரும் விவாதம்: நவகாலனியம் தொடர்பான எதிர்மறை நிலைபாடுகள்

இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்த காலகட்டத்தில் ஏகாதிபத்தியம் முக்கியமான மாறுதல்களுக்கு உள்ளானது என்பது இப்போது பொதுவாகவே ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. இந்த மாறுதல்களைத் தொடர்ந்து அவற்றை விளக்கிப் பேசும்போது அதன் பகுதியாகத்தான் 'நவகாலனியம்' என்ற வார்த்தை பிரச்சாரத்திற்குள்ளாகிறது. இந்தப் புரிதலைக் கடந்து சென்று இந்தக் கால கட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்ட மாறுதல்களின் தன்மை எத்தகையது என்பதை ஆராயும்போது அடிப்படையில் மாறுபடும் எதிரணிகளுக்கு உடன்பாடான கருத்துக்களின் நீரோட்டத்தை நாம் பார்க்கமுடியும். 1960களில் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தில் ஏற்பட்ட பிளவோடு ஒட்டி நடைபெற்ற "மாபெரும் விவாதத்தில்" இருக்கும் ஆவணங்களிலும் சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. (எம்-எல்) கட்சிகளின் திட்டங்களிலும், முக்கியத்துவத்துடனும் அல்லாமலும் 'நவகாலனியம்' விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சி.பி.ஐ. மற்றும் சி.பி.ஐ. (எம்) உள்பட்ட சோவியத்அணி 'நவகாலனியத்தை' ஏகாதிபத்தியத்தின் பலவீனமானதும் சோர்ந்துபோனதுமான ஒரு கட்டமாக மதிப்பிட்டது, ஆனால் சி.பி.ஐ. (எம்.எல்) உள்பட சீன அணியில் இந்த புரட்சிச் சக்திகள் 'நவகாலனியம்' என்பது காலனியத்தின் மேலும் கொடூரமானதும் நாசகார

படிப்பகம்

www.padippakam.com



மானதுமான வடிவமே' என்று சந்தேகமின்றி முடிவெடுத்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தி நடைபெற்ற 'காலனி ஒய்ந்து போதல்' என்ற நடவடிக்கையை (அல்லது போக்கை) எப்படிப் புரிந்து கொள்வது என்பதைத் தெளிவுபடுத்துவதன் பகுதியாகத்தான் 'நவகாலனியத்தின் அப்ருவர்கள்' என்ற புகழ்பெற்ற ஆவணத்தில் 1963-லேயே சீனக் கம்யூனிஸ்டு கட்சி இந்த நிலைபாட்டை மேற்கொண்டது. 'காலனி ஓய்ந்து போதல்' (DE Colonization) என்பது காலனிய ஆட்சியின் முடிவு கிடையாது என்றும், மாறாக அதன் புதிய வடிவத்திலான தொடர்ச்சி மட்டும்தான் என்றும் விளக்கிக் கூறிக் கொண்டுதான் சீனக் கம்யூனிஸ்டு கட்சி அன்று இந்த நிலைபாட்டை எடுத்தது. 'காலனியம் இன்றைய உலகில் ஏறக்குறைய காலாவதியாகிக் கொண்டிருக்கிறது' என்ற சி.பி.எஸ்.யு, (சோவியத் கம்யூனிஸ்டு கட்சி)வின் பிரச்சாரத்தைக் கண்டனம் செய்தவாறும், மற்றும் அதற்கெதிரான விவரங்களை முன் வைத்தவாறும் சீனக் கம்யூனிஸ்டு கட்சி கீழ்வருமாறு கூறுகின்றது: 'சி.பி.எஸ்-யு. (சோவியத் கம்யூனிஸ்டு கட்சி) தலைவர்கள் பிரச்சாரம் செய்கின்ற காலனியத்தின் மறைவு' என்ற சித்தாந்தம் போலவே 'புதிய கட்டத்தை' பற்றிய அவர்களுடைய சித்தாந்தமும் அமெரிக்கா பிரதிநிதித்துவப்படுத்தும் நவகாலனியத்தின் ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகள் மீதான கொள்கை மற்றும் ஆக்கிரமிப்புக்களுக்கு வெள்ளைச் சாயம் பூசும் நோக்கத்தைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத்திற்கும் ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கிடையே இருக்கும் கூர்மையான முரண்பாட்டை மறைத்து வைப்பதற்கும் இப்பகுதி மக்களின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்குவதற்கும் கூட இது குறிவைக்கிறது.

### நவ காலனியத்தின் கீழுள்ள சுதந்திர அரசுகள்; ஓர் குருஷ்சேவிய சித்தாந்தம்

பழைய சோவியத் யூனியன் நொறுங்கிப் போனால் கூட சோவியத் நூல்களும் அவை பிரச்சாரம் செய்த பொது நிலைபாடுகளும் உடனடியாக மறையாது. இந்தியாவில் உள்ள சி,பி,ஐ, சி,பி.ஐ. (எம்) போன்ற உலகம் முழுவதிலுமுள்ள குருஷ்சேவியப் பாதையைப் பின்பற்றுகின்ற கட்சிகளும், சீனாவில் உருவான டெங் - திரிபுவாதமும் முன்வைத்த மூன்றுலகச் சித்தாந்தத்தின் பொறியில் சிக்கியுள்ள உலகளாவிய மார்க்சிய லெனினியக்



குழுக்களும் போன்றவை பழையதும் புதியதுமான பல்வேறு வடிவங்களில் இந்த நிலைபாட்டை பாதுகாத்துக்கொண்டிருக்கின்றன; ஆனால், நவ காலனியம் தொடர்பான மேற்கூறப்பட்ட குருசேவிய நிலைபாட்டுடன் தொடர்புபடுத்திக் கொண்டுதான், இன்று பல்வேறு பிரச்சார வடிவங்களில் தோன்றும் புதிய திரிபுவாத நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும்.

பெரிய அளவில் பிரசசாரம செய்யப்பட்ட பழைய (Progress) முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்ட ''பொலிட்டிக்கல் இக்கானமி; கேப்பிடலிசம்'' என்ற நூலில் முன் காலனிகளாக இருந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் 'தேசிய இறையாண்மைத் தகுதி'யைப் புகழ்ந்த பிறகு அது 'ஏகாதிபத்தியத்தை முழுமையாக ஒழிக்கவில்லை என்றும், காலனியத்தின் சுரண்டல் சாத்தியப்பாடுகளை குறைக்கத்தான் செய்துள்ளது' என்றும் கூறிக்கொண்டு ஆரம்பிக்கின்ற பாராவில் நவகாலனியத்தை இப்படி

படிப்பகம்

www.padippakam.com



வரையறுக்கின்றது. ''சாராம்சத்தில் அரசு சுதந்திரம் அடைந்த வளரும் நாடுகளில்உள்ள மக்கள் மீதான பொருளாதாரச் சுரண்டலையும் அவர்களின் சார்புத் தன்மையையும் நிலைநாட்டுவதற்காக ஏகாதிபத்திய நாடுகள் கையாளுகின்ற பொருளாதார அரசியல் ராணுவ வழிமுறைகளின் சேர்க்கைதான் நவகாலனியம்'' இந்தப் பதிப்பகம் வெளியிட்ட விஞ்ஞான கம்யூனிசத்தைப் பற்றிய அகராதியில் ஏகாதிபத்தியத்தின் 'சிதறுதல்', மற்றும் பலவீனமடைதலினால்' உருவான விடுதலை பெற்ற நாடுகளின் சுதந்திரத்தைக் குழிபறிப்பதற்கும், சுரண்டுவதற்குமான ஒரு ஏகாதிபத்திய வழிமுறையாகத்தான் நவகாலனியத்தை வரையறுத்திருக்கின்றது. இன்று எந்தவிதமான சித்தாந்த மறுப்பும் தேவையற்ற நிலையில் காட் உள்பட அனைத்து நிகழ்காலச் சம்பவங்களின் வெள்ளப் பெருக்கில் இச்சித்தாந்தங்கள் அடித்துச் செல்லப் பட்டுவிட்டன.

'சாராம்சத்தில் அரசு, சுதந்திரம் பெற்ற வளரும் நாடுகளில்' என்று துவங்கும் மேற்குறிப்பிட்ட வரையறையில் சொல்லியிருக்கின்ற, முன்னாள் காலனி நாடுகளில் நிறுவப் பட்டுள்ள சுதந்திர அரசு என்ற நிலைபாடு தான், ஏகாதிபத்தியத்தைப் பற்றிய மார்க்சிய சித்தாந்தத்தில் திருத்தம்செய்து குருஷ்சேவிய வாதத்தைப் புகுத்திய புதிய அணுகுமுறையாகும், இதுவேதான் குருஷ்சேவிலிருந்து 'மூன்றுலகச் சித்தாந்தம்' வரை அனைத்து வகைத் திரிபுவாதங்களும் கடைபிடிக்கின்ற ஆராய்ச்சி முறையின் திறவுகோலாக இருக்கின்றது. முன்னாள் காலனி நாடுகளில் இன்றிருக்கின்ற நவகாலனியஅரசுகள் காலனியக் காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்தால் நுணுக்கமாகவும் பொதுவாகவும் அனைத்து அம்சங்களிலும் உருவாக்கிவளர்த் தெடுக்கப்பட்டனவாகும்,

இந்த அரசுகளுக்கு ஏதாவது அடிப்படை அசைவுகள் ஏற்படாமல் கவனம் செலுத்தி இயல்பாகவும் படிப்படியாகவும் திட்டமிட்டுத் தான் இன்றைய ஆட்சியாளர்களுக்கு கைமாறப்பட்டிருக்கின்றன. ஏகாதிபத்திய மூலதன உறவுகளின் உலகமயமாக்கத்தில் சேர்க்கப் பட்ட தரகு தொழில் துறை முதலாளித்துவமும், இதே மூலதனத்தின் கமிஷன் ஏஜெண்டுகளாக வளர்த்தெடுக்கப்பட்ட தரகு அதிகார வர்க்கமும் வரலாற்று ரீதியாகவே இவற்றுக்கு அடிபணிந்து வரும் நிலப்பிரபுத்துவமும் உள்பட்டதுதான் இந்த நாடுகளின் ஆளும் வர்க்கங்கள். அரசு இயந்திரத்தின் கருவிகளான பாராளுமன்ற அரசியல் தலைமைகள் உள்பட, அதிகார வர்க்கம் மட்டுமின்றி அதன் தொடர்ச்சியான ராணுவத் தலைமையும் இன்று அவர்களது கமிஷன் பெறுதலுக்கு 'புகழ்' பெற்றவைகளாகும். வியாபார அரசியல் தரகு சக்திகளை நிலை நாட்டுவதில் முக்கியப் பங்காற்றுகிற கமிஷன் முறை என்பது, ஆட்சி - சமூக-அரசியல் அரங்கத்தில் நடைபெறக்கூடிய ஒரு சில விதிவிலக்குகள் இல்லையென்றும், சமூக அமைப்பின் தவிர்க்க முடியாத பகுதிதான் என்றும் எல்லோருக்கும் தெரியும். அரசு சுதந்திரத்தின் முக்கிய காவல் சக்தியான இராணுவம் இந்தக் கமிஷன் தரகுவேலையில் மட்டுமின்றி அனைத்து அரங்கத்திலும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்துதான் நிற்கிறது. இராணுவ கருவியின் விஷயங்கள் மட்டுமல்ல, இராணுவத்தின் அமைப்பு சம்பந்தமான விஷயயங்கள் உட்பட அனைத்து இரகசியங்களும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு வெளியாக்கப்பட்ட உண்மைகளாகும். அந்தந்த நாடுகளின் மக்களைச் சார்ந்திருப்பதற்கு மாறாக, அந்தந்த நாடுகளின் மக்களைச் சுரண்டும் ஏகாதிபத்தியத்தைச் சார்ந்துதான் அவை நிலைத்துக் கொண்டிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் கூலிப்படை என்பதைத் தவிர இந்த ராணுவங்களுக்கு வேறு எந்தக் கடமையும் செய்ய்முடியாது. இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு நடைபெற்ற பல்வேறு யுத்தங்களின் ஒட்டுமொத்த வரலாறே இதற்கு ஆதாரமாகும்.

பழைய காலனியத்திலிருந்து நவகாலனியத்திற்கான நடவடிக்கைகளின் மாறுதல்களைப் புரிந்துகொண்டால்தான் இந்த உண்மைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். பழைய காலனிய முறை என்பது ஏகாதிபத்தியமும், இந்தியாவில் இருந்ததைப்

படிப்பகம்

www.padippakam.com



போன்று கவர்னர் ஜெனரல் அல்லது வைஸ்ராய் நடத்தக்கூடிய நேரிடை பொருளாதார அரசியல் அதிகார உறவுமுறையாகத் தான் இருந்தது. நவகாலனியம் மேலும் பின்னிப் பிணைந்த, விரிவான இயக்கப் போக்குகளை உடைய வழியில்தான் பொருளாதார அரசியல் உறவுகளை நிர்ணயிக்கின்றது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட நாட்டின் குறிப்பிட்ட தலைமையின் அல்லது குறிப்பிட்ட சந்தர்ப்பத்தின் செயல்களின் குழப்பநிலை அல்ல, மாறாக மேலும் அதிகமாக பொதுவானதான உலகளாவிய அதிகார மையம், மற்றும் உறவுகளின் சுழல் பாதையில்தான் நவகாலனியம் இருக்கிறது. மிகவும் உயர்த்திப் பேசப்பட்ட காலனி ஒழிப்புக்குப் பிறகுகூட ஏகாதிபத்திய மேலாண்மையை அடிப்படையில் மீறக்கூடிய எந்த முயற்சியையும் ஏகாதிபத்தியம் சும்மா விட்டுவைக்கவில்லை. சமீப கால வரலாறே அதற்குச் சாட்சியாகும். அறிவியல் தொழில்நுட்பத் துறை, அதன் தொடர்ச்சியாக இராணுவத்துறை, பொருளாதாரத்துறை மற்றும் இதன் பகுதியாக உலகப்பொருளாதார அரசியல் சமூக வாழ்க்கையின் ஒழுங்குவிதிகளை அமைத்தல்போன்றவற்றிலும் ஏகாதிபத்தியம் பெற்றுள்ள புதிய வளர்ச்சியும் சாதனைகளும்தான் மேற்குறிப்பிட்ட மேலாண்மைத் திறனை ஏகாதிபத்தியத்திற்கு அளித்தன.

மேற்குறிப்பிட்ட அனைத்து விஷயங்களில் இருந்தும் ஒரு உண்மை தெளிவாகிறது. அனைத்து திரிபுவாதச் சித்தாந்தங்கள் மற்றும் வரையறைகளின் வஞ்சகத் தன்மை நவகாலனியத்தை ஏகாதிபத்தியப் பொருளாதார மேலாண்மை அல்லது நவகாலனிகளின் பொருளாதார சார்புத்தன்மையின் விஷயத்தை மட்டும் சித்தரிக்கிறது என்பதாகும். இவர்கள் இரண்டாம் அகிலத்தின் ஏகாதிபத்தியப் பொருளாதாரச் சித்தாத்தங்களை எதிர்த்து லெனின் நடத்திய வரலாறு படைத்த போராட்டங்களை முழுக்க முழுக்க புறக்கணிக்கின்றனர்.

## மூன்றுலக சித்தாந்தம் குருஷ்சேவிய சித்தாந்தத்தின் தொடர்ச்சி

1974-ல் ஐக்கிய நாடுகளின் சபையில் டெங்சியாவோ பிங் பேசுகையில் முன்வைத்ததும், தொடர்ந்து நடைபெற்றுவந்த ஐ. நா. சபைப் பேச்சுக்களில் சீனப் பிரதிநிதிகள் கூறியவையும் உள்பட அறிக்கைகள் 'பீகிங் ரிவ்யூ' பத்திரிக்கையில் கட்டுரைகளாக வந்திருக்கின்றன. அவைகளில் எல்லாமே, உலகை மூன்றாகப் பிரித்து வரையறை செய்வதுடன், மூன்றாவது உலகம் என்று அழைக்கப்படும். ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளின் சுதந்திரத் தன்மையைப் பற்றிய குருஷ்சேவிய சித்தாந்தம் உட்புகுந்திருப்பதைப் பார்க்கமுடியும். 1970 களின் மத்தியில் சீனம் அரசியல் சுதந்திரம் அடைந்த விடுதலைப்பெற்ற மூன்றாம் உலக நாடுகளைப் பற்றிய தொடர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பித்தது. டெங்சியாவோ பிங் அவரது 1974–ஏப்ரல் 10-ஆம் தேதி நடத்திய பேச்சில் ஐ.நா. சபையில் கீழ்வருமாறு கூறினார். "பல்வேறு வளரும் நாடுகள் நீண்ட காலம் காலனியம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் ஒடுக்கு முறைகளையும் சுரண்டல்களையும் அனுபவித்துள்ளன. ஆனால் அவை அனைத்தும் காலனியத்தின் மிச்சசொச்ச சக்திகளை துடைத்தெறிவது மற்றும் தேசிய பொருளாதார அமைப்பை வளர்த்தெடுத்து தேசிய சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதின் வரலாற்றுக் கடமைகளை இன்று எதிர்நோக்குகின்றன.'' 'மூன்றாவது உலக நாடுகள், எதிர்க்கொள்ளக்கூடிய ஏகாதிபத்தியத்தின் குறிப்பாக வல்லரசுகளின் இந்த 'நவ காலனிய முறைகளை' இந்நாடுகளில் இருக்கும் 'சுதந்திர' அரசுகள் மேற்கொள்ளக்கூடிய அவசிய நடவடிக்கைகள் மற்றும் கோட்பாட்டு அணுகுமுறைகளின் வாயிலாகவும் தீர்வு காணமுடியும் என்ற நப்பாசையை வளர்ப்பதாகும். அந்நாளில் ஐ. நா. சபையில் சீன பிரதிநிதிகளின் குழுத் தலைவராக இருந்த டெங்சியாவோ பிங் மற்றும் துணைத் தலைவரான ஹுவாங்ஹுவாவின் பேச்சுக்கள், சோவியத் திரிபுவாதத்தைப் போலவே, நவகாலனியத்தை பலவீனமான ஏகாதிபத்தியம் தன்னுடைய நிலையை பாதுகாக்க மேற்கொள்ளும் வழி முறை

படிப்பகம்

www.padippakam.com



யாகத்தான் சித்தரிக்கின்றன. சுரண்டலின் 'நவகாலனியமுறை'களைப்பற்றிய டெங்சியாவோ பிங்கின் சித்தாந்தமும், பொருளாதார விஞ்ஞான ரீதியாகப் பார்க்கும்போது ஆழக்குறைவாக சோவியத் நிலைபாடுகளைக்கூடக் கடந்து செல்கின்றன. குருஷ்சேவியவாதிகளைப் போலவே டெங்கியவாதிகள் மற்றும் பிற திரிபுவாதிகளுக்கு நவகாலனியம் என்பது தகர்ந்து போன ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களேயாகும் என்ற நிலைபாடுதான் உள்ளது.

## 1960. மாஸ்கோ அறைகூவலின் வலதுசாரித் தாக்கங்கள்

உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் பலகட்டங்களாக, பொதுவாகச் செல்வாக்கு செலுத்திய மேற்குறிப்பிட்ட பலவீனங்களின் காரணங்களை முழுமையாகப் புரிந்துக் கொள்வதற்கு நாம் மேலும் சிறிது விரிவான தேடுதல் மேற்கொள்ளவேண்டும். சீனக் கம்யூனிஸ்டு கட்சி, இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்த காலகட்டத்தில் ஏகாதிபத்தியத்திற்கு ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை அங்கீகரிக்கவும், ஏகாதிபத்தியம் பலவீனமடைந்துவிட்டது என்ற சோவியத் நிலைபாட்டை நிராகரிக்கவும் செய்தது. ஆனால் மேற்கூறப்பட்ட மாற்றங்களை உட்கொண்ட நவகாலனியத்தைப் பற்றிய அனைத்து அம்சங்களையும் தழுவிய பொருளாதார அரசியல் ஆய்வையும் சித்தாந்தத்தையும் முன் வைப்பதற்கான முன் முயற்சியை சீனக் கம்யூனிஸ்டு கட்சி மேற்கொள்ளவில்லை. இந்த பலவீனம் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு ஏற்கெனவே நாம் பார்த்ததைப்போல் கடுமையான கேடுகளை விளைவித்தது. ஊசலாட்டங்களும், தடம்புரளுதல்களும் நிரம்பிய ஒரு நெடிய வரலாறும் இதற்கிருக்கின்றது.

1950-களின் மத்தியில் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப்பிறகு புதிய தலைமை உருவான கட்டத்தில் முன்னாள் காலனி நாடுகளுக்கு ஏற்பட்ட புத்துணர்வின் பின்னணியில் இந்த நாடுகளின் சுதந்திரத்தைப்பற்றிய ஒரு நப்பாசை உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் வலுப் பெற்றது. உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு சோஷலிசக் கொடியின் கீழ் வந்தபிறகு நடைபெற்ற 'காலனி ஒழிப்பு' நிகழ்ச்சிப் போக்குகள் சோஷலிசத்தின் பலத்தை பெரிதுபடுத்தி மதிப்பிடும் போக்கு உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தில் வலுப்பெற்றது.

1960-ல் 81 கம்யூனிஸ்டு கட்சிகள் சேர்ந்து நடத்திய மாஸ்கோ அறைகூவலில் இந்நிலைபாடுகளின் பலமான செல்வாக்கைப் பார்க்க முடியும். ''காலனியத்தின் அழிவு நெருங்கியுள்ளது'' என்றும் ''உலக முதலாளித்துவம் மிகத் தீவிரமாக நொறுங்கிச் சேழித்து கொண்டிருக்கிறது'' என்றும், ''சமூகப் படைப்பு அமைப்பில் தீர்மானகரமான அம்சம் சோஷலிச அமைப்பாக மாறியுள்ளது என்பதுதான் நமது காலகட்டத்தின் சிறப்புத்தன்மை,'' என்றும் கூறிக்கொண்டு ஏகாதியத்தியத்தின் பலத்தை குறைத்து மதிப்பிடுவதற்கும், சோஷலிசத்தின் பலத்தை மிகைப்படுத்திப் பார்ப்பதற்கும் இந்த ஆவணம் முயற்சிக்கிறது.

உலக சூழ்நிலைமையைப் பற்றிய இந்த தவறான மதிப்பீட்டின் தொடர்ச்சியாக சோஷலிச சமூகத்தில் முதலாளித்துவ மீட்சியின் சாத்தியப்பாடுகளை மறுப்பதும், யுத்தத்திற்கான சாத்தியப்பாடுகளை தவிர்க்க முடியும் என்ற மோகம் போன்ற பிற்கால திரிபுவாத நிலைபாடுகளுக்கு அடிப்படையாக நிகழ்ந்த பல்வேறு பார்வைகளை இந்த ஆவணத்தில் நாம் பார்க்க இயலும் ஏகாதிபத்தியத்தின் மற்றும் சோசலிஷசத்தின் பலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை தொடர்புபடுத்திக் கொண்டுதான் இவை அனைத்தையும் மாஸ்கோ அறைகூவல் கூறுகின்றது. உதாரணமாக இந்தப் புதிய மதிப்பீட்டின்பின்னணியில்தான் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் பழைய நிலைப்பாட்டை திருத்திக்கொண்டு இந்த ஆவணம், ''இன்று சோவியத் யூனியனில் மட்டுமின்றி பிறசோஷலிச நாடுகளிலும் கூட முதலாளித்துவ மீட்சி நடக்க முடியாத நிலை உருவாகியுள்ளது'' என்ற பார்வையை முன் வைக்கிறது, அல்லாமல் இந்தியாவில் சி.பி.ஐ.(எம்) பிரசாரம் செய்வதைப்போல் கேடு கெட்ட, உயிரற்ற முறையில், சோஷலிசத்திற்கு ஒருமுறை வந்து சேர்ந்தபிறகு திரும்பிப்

படிப்பகம்

www.padippakam.com



போக முடியாது என்ற நிலைபாட்டில் அல்ல! அதுமட்டுமின்றி, பிற்காலத்தில் உலக திரிபுவாதம் உலக கம்யூனிஸ்டு இயக்கத்தின் என்றைக்குமான மதிப்பீடுகள் என்ற முறையில் பிரச்சாரம் செய்த பல நிலைபாடுகளும் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய இந்தப் புதிய மதிப்பீட்டின் அடிப்படையில் குருஷ்சேவியவாதிகள் திருத்தி எழுதியவையாக இருந்தன என்பதுதான் உண்மை-

## காலகட்டத்தைப் பற்றிய லெனினிய நிலைபாட்டை திருத்துகின்றன

நிகழ் காலகட்டத்தைப் பற்றி 'ஏகாதிபத்தியத்தின் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகளின் யுகம்' என்று லெனினியம் மதிப்பிடுகிறது. 1960 மாஸ்கோ அறைகூவல் இந்த மதிப்பீட்டை வெளிப்படையாக நிராகரிக்கவில்லை. ஆனால் அதேநேரத்தில் இப்படி மறுப்பதற்கான கருத்தியல் அடிப்படை அந்த அறைகூவலில் வடிவெடுக்கிறது. அதைத் தொடர்ந்து சீனக் கம்யூனிஸ்டு கட்சி இந்த வலதுசாரிப் போக்கை தடுக்க முயற்சித்தது என்பதை நாம் பார்த்தோம்.

குருஷ்சேவியவாதிகள் இதைப் புதிய யுகம் ஒன்றின் உதயமாக உலகெங்கும் கொட்டி முழக்கினர். நாம் பார்த்ததுபோல அவர்கள் ஏகாதிபத்தியத்துடன் நடைபெறும் போராட்டத்தில் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சக்தியையும் அரசியல் சக்தியையும் செயற்கையாகப் பிரிக்கவும், ஏகாதிபத்தியத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையிலான அரசியல் எதிர்ப்புத்தன்மையை அலட்சியப்படுத்தி அவற்றிற்கு இடையிலான முரண்பாட்டை பொருளாதாரப் போட்டியின் விஷயமாகச் சுருக்கவும் செய்தனர். குருஷ்சேவ் முன்வைக்கக் கூடிய சமாதானகரமான சகவாழ்வின் அடிப்படை மதிப்பீடும் இதுவே ஆகும். ''உலகத்தின் ஓட்டுமொத்த உற்பத்தியில் சோஷலிசத்தின் பங்கு முதலாளித்துவத்தின் பங்கைவிட அதிகமாக மாறக்கூடிய காலம் நெருங்கியுள்ளது, மனித உழைப்பின் குறிப்பிடத்தக்க பொருளியல் உற்பத்தியில் சோஷலிசம் முதலாளித்துவத்தைத் தோற்கடிக்கப் போகிறது'' என்று தான் மாஸ்கோ அறைகூவல் மதிப்பிட்டது.

வெளிப்படையான அரசியல் அதிகாரத்தை அளித்த பிறகு பொருளாதாரச் சுரண்டலை பலப்படுத்துகின்ற ஏகாதிபத்தியத்தின் மறைமுக ஆதிக்கம்தான் நவகாலனியம் என 1965 டிசம்பர் மாதம் சி. பி. ஐ. கேரள மாநிலக் குழுவின் கல்விப் பிரிவு 7-வது கட்சிக் காங்கிரஸின் வகுப்புக் குறிப்புகளில் கூறுகின்றது. இந்த வரையறையையும் குருஷ்சேவிய நிலைபாடுகளையும் மேலும் விரிவாக அது அணிகளுக்குக் கற்றுக்கொடுக்கவும் செய்துள்ளது. இதே ஆவணத்தில் சோஷலிச முகாமும் முதலாளித்துவ அரங்கில்தான் என்று கூறிக்கொண்டு விஷயத்தை கீழ்வருமாறு எளிமைப்படுத்துகின்றது: ''உலக நிகழ்ச்சிப் போக்குகளைத் தீர்மானிப்பதில் ஏகாதிபத்தியத்திற்கு இருந்துவந்த ஆதிக்கம் இழந்து போனது, வரலாற்றின் வளர்ச்சியை இயக்குவதில் முடிவெடுக்கும் சக்தியாக சோஷலிச அமைப்பு வளர்ந்துகொண்டிருக்கிறது'' அதாவது, பலவீனமடைந்த பொருளாதார ஏகாதிபத்தியம் மட்டுமாக மாறிவிட்ட நவகாலனியத்தை, உலகில் தீர்மானிக்கும் முக்கிய சக்தியாக மாறிய சோஷலிச அமைப்பால் பொருளாதாரப் போட்டியின் மூலம் முறியடிக்க முடியும் என்றுதான் குருஷ்சேவியவாதிகள் பிரச்சாரம் செய்து வந்தனர். 'ருஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான பொருளாதாரப் போட்டியில் ருஷ்யா தோற்றுவிட்டது' என்று கோர்பச்சேவ் மற்றும் இ. எம். எஸ். க்ளாஸ் நோஸ்ட் காலகட்டத்தில் மேற்கொண்ட ஒப்புதலில், பழைய நிலைபாடு நேர் எதிரான நிலைக்கு மாறிவிட்டதின் படுதோல்வியை நாம் பார்க்க முடியும்.

1967-ல் தத்துவார்த்த விவாதத்திற்கான நகல் ஆவணத்தில் மார்க்சிஸ்டு கட்சியும் மேற்கூறிய சித்தாந்தத்தை தங்களுடைய முறையில் வளர்த்துள்ளது. இந்த ஆவணத்தின்

படிப்பகம்

www.padippakam.com



முதல் உப தலைப்பு லெனினிய மதிப்பீட்டை நிராகரிப்பதற்கான தீவிரமான ஆவலை தெளிவாக்கும் முறையில் ''புதிய காலகட்டம்'' என்று பார்க்க முடியும். இதே கால அளவில் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் 9-வது கட்சிக் காங்கிரசில் (மாநாட்டில்) முன் வைக்கப்பட்ட லின்பியாவோவின் அறிக்கையிலும் பெருமளவில் இடதுசாரி வாசகங்களைப் போர்த்திக்கொண்டு ஏகாதிபத்தியத்தின் அழிவைப்பற்றிய நிகழ்கால நிலைபாடுகளைப் பார்க்கலாம் ''உலக ஏகாதிபத்தியத்தின் முழுமையான அழிவினுடையவும், பாட்டாளி வர்க்கப் புரட்சியின் அனைத்தையும் தழுவிய வெற்றியினுடையவும் காலகட்டம்'' என்று இந்த ஆவணம் லெனினியத்தையே திருத்துகிறது. ஆனால் சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் 10-வது காங்கிரசில் எதுவும் நடைபெறாததைப்போல் காலகட்டத்தைப்பற்றி மாவோ எப்போதும் கூறிவந்ததைப்போல் ஏகாதிபத்தியத்தினுடையவும் பாட்டாளிவர்க்கப் புரட்சியினுடையவும் லெனினிய யுகம் என்பதையும் அது திரும்பக் கூறுகின்றது. நவகாலனியத்தைப் பற்றிய சரியானதும் அனைத்து அம்சங்களையும் தழுவியதுமான மதிப்பீடு மற்றும் பார்வைப் பிரச்சனை பல்வேறு சந்தர்ப்பங்களில் உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் பல்வேறு உருவில் ஆட்கொண்டிருந்தது என்பதைத்தான் இவை புலப்படுத்துகின்றன.



## காலனியப் பிரச்சனைப் பற்றி காமின்ஃபாரம்

ஆனால், உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்தைப்பற்றி மேற்குறிப்பிட்டது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு இருந்துவந்த காமின்ஃபாரத்தையும் தோழர் ஸ்டாலினுடைய தலைமையையும் பற்றியது அல்ல. முன்பு கூறியதைப்போல 1950-களின் மத்தியில்தான் காமின்ஃபாரத்தை அடிப்படையில் திருத்திக்கொண்டு ஏகாதிபத்தியத்தின் வலிமையைக் குறைத்து மதிப்பிடும் பார்வை ஆதிக்கம் பெறுகிறது. இதற்கு முந்தைய கம்யூனிஸ்டு இயக்கத்தின் ஆவணங்கள் அனைத்துமே முன்னாள் காலனிய நாடுகளின் சுதந்திரத்தைக் குறிக்கின்ற 'காலனி ஒழிப்பைப் பற்றியும்' பிற்காலங்களில் பிரச்சாரமடைந்த சோவியத் வார்த்தையான 'நவ சுதந்திர நாடுகளின்' சுதந்திரத்தின் உட்பொருளைப் பற்றியும் முற்றிலும் மாறுபட்ட மதிப்பீட்டைக் கொண்டதாக இருந்தன. இந்த நாடுகளின் சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க இந்த நாடுகளிலுள்ள பெரும் முதலாளித்துவம் சதி செய்ததாகவும் இந்த நாடுகள் அடைந்ததாகக் கூறப்படும் சுதந்திரத்தின் பொருளின்மையும்தான் இந்தக் காலகட்டத்தில் காமின்ஃபாரத்திற்குள்ளேயும் வெளியேயும் காலனியப் பிரச்சனைப்பற்றி கம்யூனிஸ்டு இயக்கம் விவாதித்து முடிவெடுக்கக் காரணமாயிற்று. ஷுக்கோவ், ஷடனோவ், மாஸ்திக்கோவ் போன்ற அந்தக் காலகட்டத்தின் காமின்ஃபாரம் பிரமுகர்களின் நீண்டமேற்கோள்கள் மற்றும் காமின்ஃபாரம் அறிக்கைகள் ஆகியவை இந்த விஷயத்தைத்தெளிவுபடுத்தும் வகையில் ஏராளமாக உள்ளன. திருத்தல் வாதத்தின் நீண்ட கால ஆதிக்கத்தில் இவை மறைத்து வைக்கப்பட்டால்கூட இவை சர்ச்சைக்கிடமில்லாதவாறு தெளிவானவையாகும். அதுமட்டுமின்றி, காமின்ஃபாரத்தின் உள் நிலைபாட்டிலிருந்து தடம்புரள்வதற்கான அனைத்து திசை மாற்றங்களையும் திருத்துவதற்கான முன் முயற்சியும் காமின்ஃபாரம் எடுத்துள்ளது. 1945-1950 கால அளவில் இந்தியக் கம்யூனிஸ்டு இயக்கத்திற்குள் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பற்றி உருவான அனைத்து நப்பாசைகளையும் நிராகரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட தலைவர்களின் அறிக்கைகளும் கட்டுரைகளும் போக 1950 ஜனவரி 27-ல்

படிப்பகம்

www.padippakam.com



காமின்ஃபாரம் பத்திரிகையான "ஃபோர் எ லாஸ்டிங் பீஸ், ஃபோர் பீப்பிள்ஸ் டெமாக்ரசி" யில் வெளிவந்த "காலனிகள் மற்றும் சார்பு நாடுகளின் தேசிய விடுதலை இயக்கத்தின் வலுப்பெற்ற முன்னேற்றம்'' என்ற தலையங்கத்தில் தெளிவாக எடுத்துள்ள நிலைபாடுகளும் காரணமாகும். அந்த தலையங்கத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் நடைமுறை தந்திர ரீதியான பின்வாங்குதலைப்பற்றியும் சந்தேமின்றி கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே இருந்து வந்த எதிரிகளான ஏகாதிபத்தியம் மற்றும் நிலப்பிரபுத்துவத்துடன் தற்போது ஆளும் வர்க்கமாகிவிட்ட பெருமுதலாளித்துவத்தைக்கூட இந்திய தேசிய விடுதலையின் எதிரிப் பட்டியலில் உட்படுத்தியது காமின்ஃபாரம். இதைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் திட்டத்திலும் இந்த நிலைபாடு இடம் பெற்றது. இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் வரலாற்று ஆவணங்களின் தொகுப்பில்-1948-1950 கால அளவைக் குறிப்பிடும் ஏழாவது தொகுப்பின் முன்னுரையில் எம். பி. ராவ் (M.B,RAO) வலது சாரிக் கம்யூனிஸ்டு கட்சியின் பார்வையில் கீழ்வருமாறு எழுதுகிறார்: "ஆனால் ஆகஸ்டு பதினைந்தில் என்ன நடை பெற்றது? இது சுதந்திரமாக இருந்ததா? 1955-ல் நாம் அதை சுதந்திரமாக அங்கீகரிக்கும் வரை குழப்பத்திற்குரிய விஷயமாகவே அது இருந்தது."

நாம் முன்னர் பார்த்ததைப்போல, குருஷ்சேவியத்திற்கான பயணத்தின் பகுதியாக உலகக் கம்யூனிஸ்டு இயக்கத்திற்குள் ஏற்படுத்தப்பட்ட ஒரு பெரிய திருத்தல்வாத இயக்கத்தின் பகுதியாகத்தான், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில், முன்னாள் காலனி நாடுகளில் ஏகாதிபத்தியம் தன்னுடைய மிச்சசொச்சங்களை விட்டுவைத்து வெளியேறியதாகவும் இந்த நாடுகள் சோவியத் ஆவணங்களில் புதிய சுதந்திர நாடுகளாக மாறியதாகவும் கருத்துக்கள் இடம் பெற்றன.

## முடிவுரை

உலகக் கம்யூனிஸ்டு இயக்கம் எதிர்கொள்ளும் எதிர்த் தாக்குதலுக்குப் பின்னால் ஏகாதிபத்தியத்தின் மறைவைப் பற்றிய குருஷ்சேவிய-டெங்சியாபிங்கிய நிலைபாடுகள் மிகப் பெரிய பங்காற்றியிருக்கின்றன. ஏகாதிபத்தியத்தின் வலிமையைக் குறைத்து மதிப்பிடக் கூடிய இந்த நிலைபாடுகள் உலகளாவிய புரட்சி சக்திகளின் மீது, பல்வேறு வகையில் பலவீனப் படுத்துமளவுக்கு இன்னும் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றன. கருத்தாய்வு மிக்க தத்துவார்த்த விவாதங்கள் தேவையற்ற அளவில் நிகழ்கால உலக வரலாறும் சூழ்நிலைமையும் இந்தப் போலியான மார்க்சிய-லெனினிய சித்தாந்தங்களை நொறுக்கிய பிறகும்கூட புதிய விளக்கங்களுடன் இவற்றை ஒரு தடவைகூட மீட்டெடுப்பதற் கான முயற்சிகள் பல வழிகளில் இன்றைக்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மூன்றுலகச் சித்தாந்தங்களின் புதுவரையறைகளும் மறு காலனியத்தைப் பற்றிய கண்டு பிடிப்புகளும் அனைத்தும் இதுவேயாகும். இந்தியாவில் சி. பி. ஐ. (எம்)ன் இந்தப் புதிய சித்தாந்த ஊதுகுழலுக்கு கோமாளிகளைப்போல் ஊர்வலம் போகின்ற பல்வேறு சி. பி. ஐ. (எம். எல்.) குழுக்களின் அவல நிலைமை இந்த விஷயம் எவ்வளவு முக்கியமானது என்பதை நமக்கு எடுத்துக் கூறுகின்றது.

—காம்ரேட் மலையாள ஏட்டில் (19—4—94)
வெளிவந்த கட்டுரை

படிப்பகம்

www.padippakam.com



# வீழ்வோமாயினும் வெல்வோம்

*Eugne V. Debes May, 1904*

தமிழில் : **ஞானம்**

நூறாயிரம் தடவைகள் தடுமாறி இருக்கிறது;
தலைகுப்புற விழுந்திருக்கிறது; சிராய்த்துக் கொண்டிருக்கிறது—
மீண்டும் எழுந்திருக்கிறது தொழிலாளர் இயக்கம்.
கழுத்து நெரிக்கப்பட்டிருக்கிறது
மூச்சுத் திணறி உணர்விழந்திருக்கிறது
நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டு,
தாக்கப்பட்டிருக்கிறது அடியாட்களால்
தடியடி பட்டிருக்கிறது காவல் துறையினரால்
சுடப்பட்டிருக்கிறது இராணுவத்தால்
அவதூறு பொழியப்பட்டிருக்கிறது பத்திரிக்கைகளால்
எரிச்சலோடு பார்க்கப்பட்டிருக்கிறது பொதுமக்களால்
மிரட்டப்பட்டிருக்கிறது மத குருக்களால்
திசை திருப்பப்பட்டிருக்கிறது அரசியல்வாதிகளால்
நிராகரிக்கப்பட்டிருக்கிறது ஓடுகாலிகளால்
உதிரம் உறிஞ்சப்பட்டிருக்கிறது புல்லுருவிகளால்
ஊடுருவப்பட்டிருக்கிறது உளவாளிகளால்
காட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது துரோகிகளால்
பாரம்பரியம் இழந்திருக்கிறது பச்சோந்திகளால்
விலை பேசப்பட்டிருக்கிறது தலைவர்களால்
கைவிடப்பட்டிருக்கிறது கோழைகளால்.
இத்தனையும் மீறி இவ்வளவும் தாண்டி
இந்தப் புவிக்கோளம் இதுநாள்வரை அறிந்தவற்றுள் எல்லாம்
ஜீவனும் திறனுமுள்ள சக்தியாய்
காலங்களின் அடிமைத்தளையிலிருந்து
பாட்டாளி வர்க்கத்தை விடுவிப்பதான—தனது
சரித்திரக் கடமையை நிறைவேற்றும்.
அடைந்தே தீரும் இறுதி லட்சியத்தை !
சூரியன் அஸ்தமிக்கும் என்பதுபோல்
நிச்சயமாய்!

படிப்பகம்

www.padippakam.com

# புலிகளின் சிறையில் ஈழத் தமிழ் பெண் கவிஞர்! அவர் கவிதைக்கு சர்வதேச விருது!!

செல்வி என்ற ஈழத் தமிழ் பெண் கவிஞரை 1991-முதல் புலிகள் சிறை வைத்துள்ளனர். இப்போது அவர் கவிதைகக்கு சர்வதேச விருது வழங்கப்பட்டிருக்கிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரனின் நேரடி கட்டளையின் பேரில் கைது செய்யப்பட்ட செல்வி மூன்று மாத கடுமையான விசாரணைக்கு பிறகு தனி கொட்டடி சிறையில் அடைக்கப்பட்டார்.

செல்வியின் உடல்நலம் நாளுக்கு நாள் சீர்குலைந்து வந்த நிலையிலும் அவர் குடும்பத்தினர் வந்து சந்திக்க புலிகள் அனுமதிக்கவில்லை. மேலும் அவருக்கு படிக்க புத்தகங்கள் கூட மறுக்கப்பட்டன. எழுதுவதற்கு தாளும், பேனாவும்கூட மறுக்கப்பட்டிருக்கிறது.



கவிஞர் செல்வி, தமிழ் மக்களால் பெரிதும் மதிக்கப்படும் முற்போக்கு ஜனநாயகஇலக்கிய வாதியாவார். அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று இந்தியா மட்டுமின்றி உலக நாடுகள் பலவற்றிலும் உள்ள முற்போக்கு-ஜனநாயக இலக்கியவாதிகள் குரலெழுப்பி வருகின்றனர். இதற்கு இன்றுவரை புலிகள் பதிலளிக்காமல் இருந்து வருகின்றனர். கவிஞர் செல்வியை ஒழித்துகட்டி விடுவதென்று புலிகள் தீர்மானித்திருப்பதாக கருதப்படுகிறது.

ராஜினி திரணகமாவின் கொலைக்குபிறகு அவரைப்போல் மனித உரிமைகளுக்காக போராடக் கூடியவராக செல்வி இருந்தார். செல்வி புலிகளுக்கு எதிராக கவிதை படைத்தார் என்பதற்காக கைது செய்யப்பட்டார். ஆனால் செல்வியின் கேள்வியோ ''விடுதலைக்காகப் போராடும் இயக்கத்திற்குள் 'சுய விடுதலை' சாத்தியமா?'' என்பதாகயிருந்தது.

கவிஞர் செல்வி வவுனியாவில் உள்ள சேமமடுவில் பிறந்தவர். யாழ் பல்கலைக் கழக மாணவியும், நாடகக் கலைஞரும் ஆவார். மேலும் மனித உரிமைகளுக்காகவும், பெண் விடுதலைக்காகவும், போராடி வந்த அவர் போரினால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பான மக்களுக்கான நிவாரணபணியிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை விமர்சித்து கவிதை இயற்றினார் என்பதற்காக இப்பொழுது சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

### சர்வதேச கவிதை விருது

இப்போது செல்விக்கு சர்வதேச கவிதை விருது வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்த விருது கவிஞர்கள் தங்கள் மனச்சாட்சிபடி கவிதை எழுதும் உரிமைகளுக்காகவும் அத்தகைய உரிமைகளுக்காக போராடுவது குற்றம் என்று சிறை வைக்கப்படுகிறவர்களுக்கும் வழங்கப்படுகிறது. அண்மையில் இப்பரிசு தஸ்லீமா நஸ்ரீன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இப்போது இந்த 10,000 ரூபாய் விருது புலிகளின் சிறையிலுள்ள கவிஞர் செல்விக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதைப் பெற்றுக்கொள்ள ஹாலந்துக்கு அழைக்கப்படுவார். அவ்வாறு பரிசு பெற முடியாமல் போகுமானால், இப்பரிசு வழங்கும் விழா ஓராண்டுக்கு தள்ளி வைக்கப்படும். இதன் மூலம் உலகத்தின் கவனத்தை திருப்பி செல்வியின் விடுதலைக்கான முயற்சியை துரிதப்படுத்துவதே விருது வழங்குவோரின் நோக்கமாகும். இவ்வாறு பல இலக்கியவாதிகள்விடுவிக்கப்பட்டுள்ளனர்.

உலக இலக்கிய வாதிகளின் குரலுக்கு புலிகள் செவிசாய்ப்பார்களா? புலிகள் இன்று வரை மவுனம் சாதித்தே வருகிறார்கள். இது அவர்களுக்கு தமிழ் மக்களிடையே மட்டுமின்றி உலகளவிலும் பெரிதும் எதிர்ப்பை தோற்றுவிக்கும் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

# தேசத் துரோகிகள்

● தெருவோரத்தில்
குப்பை மேட்டில்
வாழ்ந்து கொண்டிருக்கிறேன்
மனைவி, மக்கள், பெற்றோர்கள் உண்டு.

● தெரு பெருக்குவது
கக்கூஸ் கழுவுவது
மாளிகை கட்ட மண்ணை தோண்டுவது
எனக்கு வேலை;

● அதுவும்
கிடைக்காத போது
பிச்சையெடுத்தும்
எச்சில் பொறுக்கியும்
வயிற்றை நிரப்புவோம்.

● தேசம்
எனக்கு சொந்தம்!
ஆட்சி நடத்த
இஷ்டப்பட்டவர்களை
தேர்ந்தெடுக்கச் சொல்லி
ஓட்டு கொடுத்தார்கள்!

● எங்கள் ஓட்டில்
வெற்றி பெற்றவர்
தெருவழியாக போய்க்கொண்டிருந்த
போது
கார் 'பிரேக்டவுன்' ஆகிநின்று போனது
அவர் கீழே இறங்கி ஓரமாய் நின்றார்.

● மெல்ல நான்
அருகில் சென்று
நிலைமையை சொன்னேன்
தடைகளை தகர்த்து விட்டோம்
தேசம் முன்னேறிக் கொண்டிருக்கிறது
நகை முகத்தோடு அவர் அழகாய்
சொன்னார்.

● அன்று முதல்
எனது தொழிலுக்கும்
போட்டி வலுத்தது
எல்லா இடங்களுக்கும் சென்றுநான்
தேசத்தைப் பார்த்தேன்.

● IMF, உலகவங்கி
பன்னாட்டு முதலாளிகள்
முன்னேறிக் கொண்டிருந்தனர்
தேசம் என்றால் இவர்களா என்று
தேடிச்சென்று அவரைக் கேட்டேன்.

● அன்று இரவு,
துப்பாக்கி ஏந்திய போலீஸ்காரர்கள்
சூழ்ந்து என்னை அழைத்துச் சென்றனர்
தேசத்துரோகி என்றுசொல்லி
'தடா'வில் போட்டனர்.

● தேசம் எனக்கு
சொந்தம் புரிந்தது
தேசத் துரோகிகளை
அடையாளம் தெரிந்தது
'தடா'விற்கு அர்த்தம் இருந்தது.

—ஜலீல்

---

# தவறான செய்திக்கு வருந்துகிறோம்

பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர். தோழர். மரியோசிசான் எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டதாக போன நீண்ட பயண இதழில் வெளியிட்டிருந்தோம். அரபுவிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ் ஏட்டில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தியை ஆதாரமாக கொண்டு இச்செய்தி வெளியிடப்பட்டது. ஆனால் இந்த செய்தி தவறானது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.

தோழர் மரியோசிசான் இன்னும் வெகு காலம் வாழ்ந்து உலக புரட்சி இயக்கத்திற்கு பெரும் தொண்டாற்ற வேண்டுமென்று அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

# சூழ்ச்சி

—மார்க்பியர்ஸி

மின்னல் தாக்கி
பிளவுறும் வரையில்—
ஏதோ ஒரு மலையோரத்தில்
எண்பதடி உயரம் வளரக்கூடிய
ஒரு மரம்
அழகான தொட்டியில்
ஒரு போன்ஸாயாய்...
ஒரு தோட்டக்காரன்
கவனமுடன்
வெட்டித் திருத்தினான்.
அது இப்போது
ஒன்பது அங்குல உயரம்.
ஒவ்வொரு நாளும்
கிளைகளை வெட்டிக் குறைக்கையில்
அவன்
மெல்லிய குரலில் பாடுகிறான்
"சின்னதாய் அடக்கமாய்
பலவீனமாய் தொட்டியில்
இருப்பது தான்
உன் இயற்கை;
ஓ! சிறிய மரமே!
உனக்கென்று வளர
ஒரு தொட்டி கிடைத்திருக்கிறதே
நீ எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலி!"

தமிழாக்கம்:
விஜயகுமார்

---

# வெள்ளையும், பச்சையும், சிவப்பும்.

—துளசி பசக்

தோழரே!
புல்லின்மீது மழைத்துளிபோல விழுந்து
இதழ்களால் வெள்ளைவிரிப்பாகப் பரவும்
பூக்களைக் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தாய்.
கிளர்ச்சியுற்று அவை மண்ணின் பச்சை இதழ்களை
முத்தமிட்டுக் கொண்டிருந்தன.
அதன்பிறகு,
எதிரியின் துப்பாக்கி வெடித்தது.
உன் சொந்த இதயத்தின் இரத்தம்
மலர்களின் வெள்ளை இதழ்களை
அடர் சிவப்பாக்கியதை உன்னால் பார்க்க முடியவில்லை;
அன்று பூத்த மலர்ப்படுக்கையில் விழுந்து
தாய்நாட்டுக்கு நீ மரியாதை செலுத்தினாய்.
இன்றுநீ எங்களோடில்லை.
உனது ஒவ்வொரு குருதித்துளியும்
ஓராயிரம் பறவைகளாக மாறி
"சுதந்திரம் எமது பிறப்புரிமை!
புரட்சி நீடுவாழ்க" என்று கூவிக்கொண்டு
ஒளிரும் செங்கொடியை ஏற்றிவைக்க
உயர்ந்தவானில் சிறகை விரித்துப்
பறப்பதைக் காண
இன்றுநீ எங்களோடில்லை.

தமிழாக்கம்: கோச்சடை

படிப்பகம்

www.padippakam.com

# இந்திய கம்யூனிஸ்டு கட்சி
## (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) செங்கொடிக்கு
### நன்கொடை தாரீர் !

**தேச பக்தர்களே - பொது மக்களே!**

1967-ல் இந்திய வானத்தில் வசந்த முழக்கமிட்ட நக்சல்பாரி இயக்கத்தை அறிவீர்கள்! அந்த முழக்கத்திலிருந்து 1969-ல் உதயமான இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) இந்தியநாட்டைப்பற்றி எடுத்த நிலைபாடுகளை முற்றிலும் சரி என்று தெளிவுபடுத்துகின்றது. நமது நாட்டின் இன்றைய நிலைமை ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாக மாறிவிட்ட நவகாலனி நாடாக இருக்கின்றது என்று உறுதியாகவும், தெளிவாகவும் அப்போது எடுத்துக்காட்டியது. உள்நாட்டில் ஏகாதிபத்தியத்தின் தரகு சக்திகளான நிலப்பிரபுத்துவமும், தரகு முதலாளித்துவமும், தரகு அதிகாரவர்க்கங்களும் ஏகாதிபத்தியங்களுக்கு கொள்ளையடிப்பதற்காக நமது நாட்டின் கதவுகளை திறந்து வைத்திருக்கிறது என்பதையும் *C.P.I. (M.L.)* கூறியது.

இந்த ஏகாதிபத்திய கொள்ளையையும், நிலப்பிரபுத்துவ கொடுமையையும் எதிர்த்து நடத்திய வீரபோராட்டங்களில் விடுதலைக்காக ரத்தம் சிந்தி உயிர் நீத்த மாவீர தியாகிகளின் பாதையில் நக்சல்பாரியின் வாரிசுகள் நடந்து சென்றனர். நாட்டின் உண்மையான விடுதலைக்கு புதிய ஜனநாயக புரட்சி பாதையே நமது பாதை என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

இன்று நமது இந்திய நாட்டின் அரசியல் பொருளாதார சமூக நிலை மிக அவல நிலைக்கு சென்றுள்ளது. 1947-க்கு பிறகு 47 ஆண்டுகள் கடந்தும் விடுதலை போராட்டத்தின் லட்சியங்களும், கனவுகளும் நிறைவேறவில்லை. நாடு மேலும் அதிகமான கடனாளியாகவும், பட்டினி சாவுகள் மேலும், அதிகரித்தும், தொழிற்சாலைகள் மூடப்பட்டும், கலாச்சார பண்பாட்டு ரீதியாக ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ ஆக்கிரமிப்பு தீவிரப்பட்டும் இருக்கிறது.

ஐ. எம். எஃப், உலக வங்கி, பன்னாட்டு நிறுவனங்கள். காட் ஆகிய ஏகாதிபத்திய சுரண்டல் கருவிகள் இந்தியாவிற்குள் நுழைந்து இந்நாட்டின் வளங்களையும், உழைப்பையும் கொள்ளையடிக்கின்றன. நமது நாட்டின் ஆராய்ச்சி துறையையும், இராணுவத்தையும் கூட ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்குள்ளாக்கியுள்ளன.

இந்நிலைமையை மாற்றுவதற்காக ஏகாதிபத்திய கருவிகளை தூக்கி எறிந்து நாட்டை மீட்பதற்காக சுய சார்பான புதிய ஜனநாயக இந்தியாவை நிறுவுவதற்காக நக்சல்பாரியின் வீரமுழக்கத்துடன் செங்கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு போராடிவருகிறது இந்திய கம்யூனிஸ்டு கட்சி(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) செங்கொடி.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) செங்கொடி

தமிழ்நாடு அமைப்புக் குழு.

படிப்பகம்